தென்றல்

ஆசிரியர் — கண்ணதாசன்

தென்றல்

கம்யூனிஸ்டுகளுக்கு இது ஒரு கையகராதி!

(1)

காலம் மாறும் கழகம் வெல்லும்!

★

"கூடலரசன்"

திராவிட முன்னேற்றக் கழகம் தென்பாண்டி நாட்டில் தூத்துக்குடித் தொகுதி இடைத்தேர்தலில், "ஜனநாயகம் தழைக்க-தூத்துக்குடி வாக்காளரே! கழக அபேட்சகர் எம். எஸ். சிவசாமி அவர்களையே ஆதரிப்பீர்"-என்ற வேண்டுகோளுடன் போட்டியிட்டது. தனக்குரிய பலத்தை நிலைநாட்டியுள்ளது! கழகத்துடன் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் இரண்டுதான் என்றாலும்-கலந்துகொண்ட கட்சிகள், கழகத்துக்கு எதிராகத் தேர்தல் களத்தில் முகாம் அமைத்து முழக்கமிட்ட கட்சிகள் ஏராளம்! காங்கிரஸ் தனக்கேயுரிய படைபலத்துடனும்-பண ஆதிக்கத்துடனும்-திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிற்று! இன்னொரு கம்யூனிஸ்ட் கட்சி கேரள சர்க்கார் பெருமைகளுடன் - காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியினர் பிரஜா-சோசலிஸ்ட் கட்சி-புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி - முன்னேற்றக்கட்சி - முற்போக்கு ஜனநாயக வாதிகளின் கட்சி-தமிழரசுக் கழகம் - ஆகியவர்களுடைய துணையைத் தேடிக்கொண்டுதான் - கழகத்தை எதிர்க்கத் துணிந்தது! சென்னை சர்க்காரின் மந்திரிசபை தூத்துக்குடித் தேர்தலில் அதிகமான வாக்குகளைப் பெறமுடிந்தது; காங்கிரஸ் கட்சியல்ல! கம்யூனிஸ்டுக் கட்சியும் தன்னந்தனியாகப் போட்டியிட்டால் எவ்வளவு வாக்குகளை வாங்கமுடியுமோ அதைப்போல ஐந்துமடங்கு வாக்குகளை அதிகமாகப் பெற்றுள்ளது, ஏனைய ஆறு கட்சிகளின் ஆதரவு இருந்த காரணத்தால்! திராவிட முன்னேற்றக்கழகம் ஒன்றுதான் எவருடைய தயவுக்காகவும் காத்திராமல் தன் கடமையைச் செய்தது, கண்ணியத்தைக் காத்துக்கொண்டது! தூத்துக்குடி நகர சோசலிஸ்ட்க் கட்சி ஊழியர்கள் வேலைசெய்ய முன்வந்தார்கள் கழகத்திற்கு துணையாக-ஆனால் அவர்கள் அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்ல. தமிழ்நாட்டுக் கட்சியின் கிளை அங்கேயில்லை என்பதை அப்பன்ராஜ் - எனும் தலைவரென்பார் 'ஜனசக்தி' அறிக்கைமூலம் அறிவித்துவிட்டார்! எனவே அந்தப் பழியும் கழகத்தின் மீது படரவில்லை! வெற்றிபெற்ற காங்கிரஸ் கட்சி தன்னுடைய திரைமறை வேலைகளையெல்லாம் எண்ணியெண்ணி ஏங்குகிறது. தூத்துக்குடியில் பலன் காண எத்தனையெத்தனை அநாகரிகச் செயல்களைப் பின்னணியாக வைத்துக்கொண்டு சாமுவேல் அவர்களைச் சட்டசபைக்கு அழைத்துச் செல்கிறோம் என்று உண்மையில் வேதனைப்படுகிறது!

ஆனால் இந்தக் கம்யூனிஸ்ட் கர்மவீரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூத்துக்குடிக் கோட்டை சரிந்துவிட்டதென்றும் பிரிவினை வாதம் ஒழிந்தது என்றும்-தாங்கள் யார் யாரிடத்திலே சரணடைந்தார்கள் என்பதையெல்லாம் மறந்துவிட்டுப் பேசுகிறார்கள். எழுத்தாணியைக் குத்திக் காட்டுகிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கம்யூனிஸ்டுகள் தொடுத்த வசை மொழிகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டிய முறையில் இந்தக் கட்டுரை அமைகிறது-கம்யூனிஸ்டுகளின் கண்ணோட்டத்திலிருக்கும் குருட்டுத்தன்மையைத் திராவிடத்துச் சான்றோர்கள் உணருவதற்காக! திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை பேசிக்கொண்டு தமிழ் மக்களின் நலனுக்கு மாபெரும் துரோகம் செய்துவருகிறது எனவே அதனைத் தோற்கடிக்க வேண்டிய கம்யூனிஸ்டுகள் பிரிவினைப் பிரச்சினையை இன்று வரையிலும் ஆதரித்ததில்லை. தூத்துக்குடியில் மட்டுமே எதிர்த்தார்கள் என்றும் சொல்லமுடியாது. எந்தக் காலத்திலும்-ஏன் எத்தனையோ ஆண்டுகளாக எதிர்த்துவிட்டுத்தான் மீண்டும் துணிந்துள்ளார்கள். அவர்கள் குறிப்பிடுவதுபோல திராவிடப் பிரிவினை மக்களின் ஆதரவைப் பெறாத ஒன்று என்றால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய ஒவ்வொரு மாநாட்டிலும் இதனைக் கண்டித்துத் தீர்மானம் போட்டிருக்காது. எனவேதான் கம்யூனிஸ்டுகள் தங்களது பெருமைகளை-தமிழகத்தின் வாழ்விலும் தாழ்விலும் தாங்கள் சாதித்துள்ள காரியங்களைக் காட்டாமல் - கழகத்தின் மீது குற்றச்சாட்டுக்களைக் குவித்தார்கள்! "தேவிகுளத்தில் பெற்ற வெற்றியைப் பெற்றுத்தாருங்கள் தூத்துக்குடியிலும்" என்று எம். என். கோவிந்த நாயர் கேட்டார்! தேவிகுளம் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றதென்றால் கேரள சர்க்காரின் சாதனைகள் அல்ல காரணம்!-கோவிந்த நாயரே வருத்தமும் வேதனையும் கொண்டு அறிக்கை விட்டாரே! - கேரளக் கம்யூனிஸ்ட் சர்க்கார்:- தேவிகுளம் தேர்தலுக்கு முதல்நாள் - $1\frac{1}{2}$ இலட்ச ரூபாய்களைக் கடன் என்ற பெயராலே அத்தொகுதி மக்களுக்குக் கொடுத்ததுதான்! சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் சாக்கோ-இதைச் சொன்னபோது தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் கண்டித்தார்கள்-பொய் - புளுகு - என்றார்கள். அதனைக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் கோவிந்த நாயர் சொன்னபோது மறுக்கவில்லை!

தூத்துக்குடித் தேர்தலிலும் கம்யூனிஸ்டுகள் பணத்தைக் குவித்தார்கள் தேவிகுளத்தில் செய்ததுபோல. கேரள சர்க்காரின் உதவிகள் தமிழ்நாட்டுக் கமிட்டிக்குத் தேடி வந்தன-இந்த உண்மையை மறைக்கத் துணிந்த சங்கரய்யா என்பவர் மதுரையில் வந்து பேசினார், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆயிரம் ஆயிரமாகச் செலவு செய்யத் தயாராகிவிட்டார்கள் என்று. பணம் கொடுத்து ஓட்டு வாங்கியிருந்தால் ஜனசக்திப் பேரறிஞர்களின் கணக்குப்படி முன்னைய தேர்தலைக் காட்டிலும் வாக்குகள் குறைவாகியிருக்காதே! — அதிகமான வாக்குகள் என்று அடித்துப் பேசுகின்ற குணக் குன்றுகள்தானே அணுப் பைசாக்களில் சிக்கித் தவித்திருக்கிறார்கள்! குற்றாலத்தில் ஓய்வு பெற்றுத் தூத்துக்குடியில் யூனிஸ்டுக் கட்சி அணிகளையெல்லாம் "பிள்ளைமார் ஓட்டு பிள்ளைமார்களுக்கே" என்று பலப்படுத்திக்கொண்டிருந்த ஜீவானந்தம் கூடச் சொல்லியிருந்தார்- கம்யூனிஸ்டுகள்-தி. மு. கவுக்கு எந்த வகையிலும் இளைத்தவர்கள் அல்ல-வாக்குகள் நம்பக்கம் திரும்பிக்கொண்டிருக்கின்றன- என்று! எனவே பணப் பெருக்கத்தில்அவர்கள் பஞ்சப் பிரதேசத்திலே இருந்தார்கள் என்ற வாதத்தை-சங்கரய்யா சொல்ல மறந்த ஓர் உண்மையை, ஜீவானந்தம் நேர்மையின் எதிரொலியென்ற கட்டுரையிலே மிக மறைமுகமாக ஒப்புக்கொண்டார்.

கம்யூனிஸ்ட் முத்தண்ணாக்களிடையே கேரளத்து நாயர் சொன்னார். "போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி நான் ஒன்றும் அதிகம் பேசப் போவதில்லை. ஆனால் பிரிவினை கோஷம் மிக மிக அபாயகரமானது. புதிய சிர்குலைவாளர்களைத் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யாதீர்கள்" என்று முத்துக்களை உதிர்த்தார். கடந்த பத்தாண்டுப் பிரிவினைக் கிளர்ச்சியினாலே விளைந்த அபாயங்கள் என்ன என்பது கோவிந்த நாயரால் சொல்லமுடியாத சேதி. தமிழ்நாட்டு கம்யூனிஸ்டுகளோ-நாயருக்கு நல்லவர்கள் என்று நடித்துக் காட்ட வேண்டுமே தவிர ஆய்வுரை தரக்கூடாது! கழகம் அபாயத்தில் சிக்கிக்கொண்டதே தவிர கம்யூனிஸ்ட்க் கட்சியைப்போல அபாயகரமான செயல்களை உருவாக்கவில்லை. கோவிந்த நாயர் போனவுடன் இன்னொரு ஈஸ்வர அய்யர் வந்தார். அவர் வந்தவுடன் இந்தியக் கம்யூனிஸ்ட்க் கட்சியின் தமிழ்நாட்டுக் கமிட்டியின் அபூர்வ செயலாற்றலைப்பற்றிப் பேசவில்லை. அவர்களுக்கே உரிய கேரளத்தைத்தான் தூக்கிக் காட்டினார். அமிர்தசரஸ் தீர்மானங்களை அதிலும் குறிப்பாக அதிகாரி அவர்கள் அற்புதமாகத் தயாரித்துக் கொடுத்த அரசியல் தீர்மானத்தைக் கூறி "அய்யர்கள்" ஓட்டுக் கேட்டிருந்தால் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை பலம் புரிந்திருக்கும். ஆனால் இவர்கள் எல்லாம் தேவிகுளத்திலல்லவா நீந்திக் கொண்டு வந்து தூத்துக்குடித் துறைமுகத்தில் கரையேறத் துடித்தார்கள்! ஈஸ்வர அய்யர் ஓர் சுவையான செய்தியைச் சொன்னார். 10 வருடங்களில் டில்லிவரையிலும் செங்கொடி பறக்கும் என்று எவருடைய ஒப்புதலையும் எதிர்பாராமல் கூறினார்! இதைப் பத்து வருடங்களுக்கு முன்பாகவே இந்தியக் கம்யூனிஸ்டுகள் கூறியிருக்கிறார்கள். ஆனால் செங்கொடி, செங்கோட்டைக்குள் நுழைய முடிகிறதா என்ற கேள்விக்கே இடமில்லை! அவர் தன்னுடைய சொற்பொழிவின் இறுதியில் சொன்னாராம்! "முருகானந்தத்தின் வெற்றி விழாவிலே கலந்துகொள்ள விரும்புகிறேன்" என்ற உடனே நீண்ட கரகோஷமாம்! ஜனசக்தி உதவி ஆசிரியர்-தூத்துக்குடி நிருபர்-பதவிக்கு உயர்த்தப்பட்டவர்-தோழர் மாயாண்டிபாரதி என்பவர் ருசிகரமாகப் பத்திரிகைக்குத் தந்தார்! தேர்தலுக்குப் பிறகு ஈஸ்வர அய்யர் அவர்களும் அபரிமிதமான வாக்குகள் பெற்ற அபேட்சகர் அவர்களும் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதையும் 'தனி நிருபர்' நேரில் கண்டு கேட்டுத் தெரிந்த சேதியைச் சொன்னால் மேலும் சுவையாக இருக்கும்.

கம்யூனிஸ்டுகள் தங்களிடமிருந்த எல்லா ஆயுதங்களையும் கழகத்துக்கு எதிராகப் பயன்படுத்தியும் பலன் கிட்டாததைப் புரிந்துகொண்டு, நிதியமைச்சர் சுப்பிரமணியத்தின் 'சவால்' எனும் சவரக் கத்தியைத் தூக்கிக் கொடுத்து அனுப்பினார்கள் உரை கல் தேய்க்கும் மதிப்பிற்குரிய மாஜினி என்பவரிடம்! இவருக்கு இன்று நேற்றல்ல பத்தாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிஞர் அண்ணா அவர்கள் மீது கடுஞ்சொற்களும், இழிசொற்களும் வீசுவதென்றால் ரொம்பவும் திருப்தியாம் 1949-ம் ஆண்டு என்று எண்ணுகிறேன். இவர் ஒரு சோசலிஸ்டு. அத்துடன் 'புரட்சி' என்ற பத்திரிகையின் ஆசிரியர். யார் இந்த அண்ணாக்கள்-இவர்களை மாணவர் உலகம் மதிக்குமா? என்ற ஒரு வேடிக்கையான கேள்வியைக் கேட்டார். சில நாட்களில் மதுரை அமெரிக்கன் கல்லூரி மண்டபம்நிறைந்து, வெளியிடங்களில் எல்லாம் மக்கள் கூடி நின்று ஒலி பெருக்கி தெரிவித்த கருத்துக்களைக் கேட்டார்கள். கல்லூரி மேடையிலே நின்று பேசிக்கொண்டிருந்தவர்- மாஜினியெனும் மகாமேதை ரெ. ரெங்கசாமி அவர்கள் அல்ல. அறிவுலக மேதையென்று சான்றோர் மன்றம் பாராட்டுகிறதே அந்த அறிஞர் அண்ணா அவர்கள்தான் அமுதமொழி தந்தார்கள். ★

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 16–8–58 ‖ இதழ் 9

தாடித் தலைவர்கள் !

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு இரண்டு பெரிய அரசியல் தலைவர்கள் காங்கிரசைப்பற்றிய தங்களுடைய முடிவுகளை அடியோடு மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அகாலித் தலைவர் தாராசிங் அவர்கள் 'சீக்கியர்களுக்கு நன்மை ஏற்பட வேண்டுமானால் காங்கிரசை ஆதரிக்க வேண்டும், காங்கிரஸ் வெற்றிபெற வேண்டும்' என்று முரசறைந்து வந்தார். ஆனால் பொதுத் தேர்தலுக்குப் பிறகு அவருடைய தொனி அடியோடு மாறியிருக்கிறது. பல இடங்களில் அவர் காங்கிரசைக் கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கிறார்.

"அகாலித்தளத்தில் பிளவுண்டு பண்ணி, அதைத் தன் வசப்படுத்தக் காங்கிரஸ் முயற்சிக்கிறது; அதனால் இனிமேல் காங்கிரசுடன் ஒருநாளும் எதற்காகவும் ஒன்றுபடமுடியாது"—என்று அகாலித்தலைவர் தாராசிங் இம்மாதம் ஆறும் தேதியன்று வடநாட்டில் ஒரு கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். அதே தினத்தன்று தலைவர் பெரியார் அவர்கள் திருச்சியில் ஒரு கூட்டத்தில் பேசிஇருக்கிறார்கள்.

"மக்களுக்காக மக்கள் வகுத்துக்கொண்டது மக்களாட்சியாகும். ஆனால் நாம் இப்பொழுது வாழ்வது காட்டுமிராண்டி ஆட்சியின்கீழ் அந்நியன் இருந்த காலத்தில் நிகழாத காரியங்களெல்லாம் நமது ஜனநாயக ஆட்சியிலே நடந்தேறி இருக்கின்றன.

"யாருக்கு உன்னுடைய வாக்கு என்று கேட்டால், 'யார் பணம் அதிகமாகக் கொடுக்கிறார்களோ அவர்களுக்குத்தான் என்னுடைய வாக்கு! எவன் வெற்றிபெற்று என்ன செய்வது'—என்ற நிலையில் மக்கள் பணத்தை வாங்கிக்கொண்டு வாக்குப் போடுகிறார்கள். வாக்குப்பெற்றுப் போகின்றவர்கள் வலுவான ஒரு கட்சியில் ஆட்சியை அமைத்துக்கொள்கிறார்கள்.

"எதிர்க்கட்சிகள் எவ்வளவு நல்ல திட்டங்கள் கொண்டுவந்தாலும் எதிர்க்கட்சிகள் என்ற முறையில் அவை தோற்கடிக்கப்படுகின்றன. இன்று சட்டசபை மதிப்பிற்குரியதாக மாறிவிட்டது. எனவே அந்தத் ஸ்தானங்களுக்காக போட்டி பெருகிவிட்டது. இலஞ்சம் கொடுத்து வாக்கு வாங்கியதால் தட்டிக் கேட்கமுடியாத நிலை மக்களிடத்திலும் ஏற்பட்டுவிட்டது."

பெரியார் அவர்கள் இவ்வளவு கடுமையாக, இவ்வளவு குறுகிய காலத்திற்குள் காங்கிரசைச் சாடுவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். காங்கிரஸ் ஒன்றினால்தான் நாட்டை ஆளமுடியும் என்று ஊர்தோறும் பேசி வந்த பெரியார் இன்று காங்கிரஸ் நாட்டையாளச் சிறிதும் தகுதி வாய்ந்தது அல்ல என்று முழக்கமிடுகிறார். இந்த முழக்கம் பெருக வேண்டும் என்று தமிழகம் எதிர்பார்க்கிறது. எதிர்க்கட்சிகள் என்பதின் பெயரால் நல்ல திட்டங்கள் முறியடிக்கப்படும் கொடுமையை முறியடிக்க, தேர்தல் காலத்தில் நல்ல எதிர்க்கட்சியை உருவாக்க பெரியார் அவர்கள் ஏன் முனையக்கூடாது என்று பழம்பெரும் அரசியல் தலைவர்கள், பெரியாரால் உருவாக்கப்பட்டவர்கள் கேட்கிறார்கள்.

சட்டசபையிலே பலமான எதிர்க்கட்சி அமைய வேண்டும், அல்லது காங்கிரஸ் கட்சியை முறியடிக்க வேண்டும். இந்தக் காரியத்தை யார் செய்வதானாலும் அவர்கள் தேர்தலில் நின்றே ஆகவேண்டும். தமிழகத்தில் காங்கிரசுக்கு எதிராக தென்னாட்டுக் கட்சி ஒன்று எதிர்க்கட்சியாக அமைய வாய்ப்பிருந்தால் அதற்குத் தி. மு. க. அதனால் இயன்ற உதவிகளைத் தரத் தயாராக இருக்கிறது.

"தலைவர் பெரியார் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். திராவிடர் கழகம் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுமானால் அந்தத் தொகுதிகளில் தி. மு. க. ஒருபோதும் போட்டியிடாது" என்று அறிஞர் அண்ணா அவர்கள் ஆறு திங்கள்களுக்குமுன் இராயப்பேட்டைப் பொதுக்கூட்டத்தில் பேசியதை இப்போது நினைவுப்படுத்தி காங்கிரசை வீழ்த்த முனையப் பெரியார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

மருக்கொழுந்து !

"மருவுவா! கொழுந்தே!" என்றேன்
மங்கையை, முறைத்தாள், "பெண்ணே!
மருக்கொழுந் துள்ள தென்பால்
வாங்கவா!" என்றேன், முல்லை,
விரிந்தது, மணக்கும் பூக்கள்,
வீசின வாசம், என்பால்,
மருவினை வாங்கி, எந்தன்
மனத்தையும் வாங்கிச் சென்றாள்!

"மாலையை இடவா!" என்றேன்,
மங்கையை மறுநாள், "என்ன
கேலியா?" என்றே சீறிக்
கேட்டனள், திரும்ப, "அம்மா
மாலையைக் குடலை தன்னில்
வைக்கவா?" என்றேன், அங்கு
சோலைதான் விரிய தேனைச்
சுவைக்கநான், மனையுள் சென்றாள்.

'மணக்கவா! மணக்கும்! பெண்ணே
மல்லிகை மருவும்" என்றேன்.
"உனக்கிது துணிவா!" என்றே
உறுமினாள். நடந்தே நான்தான்
"மணக்குமா மலர்தான் என்றேன்
மயக்கமேன் பெண்ணே" என்ன,
மணத்துள, துடிப்பை மூடி
மலர்தனை வாங்கிச் சென்றாள்!

"அணைக்கவா! மருவும் பூவும்
அழிக்கவா!" என்றேன் துள்ளி
சினத்தினை முன்னே வைத்துத்
திரும்பினாள். துடித்தே நான்தான்,
"அணைத்துபூ மருவை ஒன்றாய்
அழுத்தசீர் குலையும் பூவை
இணைத்துநீ கட்டச் சொன்னாய்,
இயம்பினேன்" என்றேன். சென்றாள்!

அன்றுநான் அவளில் தீண்டி
யாதுமே மொழியா வண்ணம்
சென்றனன். கண்டாள் பின்னர்
"தேன்மலர் உண்டோ?" என்றாள்
"இன்றுபூ இல்லை!" என்றேன்
இருக்கிறேன்!" என்றாள், ஆரோ!
அன்றுதான் உண்மைப் பூவங்
கலர்ந்தது இருநெஞ் சத்தே!

—கோ. பெ. நாராயணசாமி

வெண்பாப் போட்டி-24.

ஈற்றடி :

கோவலர்வாய் வைத்த குழல்

முடிவு தேதி 23-8-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

கோவலன்

கற்புக்கரசியாம் கண்ணகியைக் கையிழந்து கணிகையர் குலக்கொடியாம் மாதவி பால் மனம்கொண்டு சென்றவன்; கொள்கையென்ற ஒரு திட்டத்தைப் பெருதவன்; சந்திக்கும் அனை வரையும் சந்தேகக் கண்கொண்டு கணக்கிடுப வன்; மற்றெல்லாக் குற்றமனைத்தும் மன்னிக் கற்பாலது, ஆனல் குலக்கொடியும் முறை மனைவி யுமான அழகுமிக்க கண்ணகியைக் கைவிட்டுச் சென்றமையால் சிலப்பதிகாரத் தலைவன் கோவ லன் கொடியவன் என்ற கருத்து நிலவி வரு கின்றது.

சிலப்பதிகாரத் தலைவன்-சிறந்த குணக்குன்று. ஒழுக்கம் வழுவா உயர் செம்மல்-வாழ்க்கையின் விளக்கு-வளம் நிறைந்த உளம் கொண்ட வள் ளல்-ஏழைமை கண்டு உளம் குழைவுறும் இள கிய மனிதன். வெறும் வெற்றுரையன்று; கோவ லன் குணக்குன்று-மாசுமறுவற்ற மாணிக்கம்என் பதை இலக்கியம் கொண்டுமட்டுமல்ல இலக் கணமும் கொண்டு எடுத்துக் காட்ட முற்படு வோம்.

கோவலன் மேல் குவிக்கப்படும் குன்றெனக் கூறும் குற்றங்களில் குறிப்பிடத்தகுந்ததும் குற் றம் போன்றதும் அவன் மாதவி மாட்டுக் கொண்ட மையலே ஆகும். பிற குற்றங்கள் மனித உணர்ச்சிகொண்ட மானிடர்கள் மாட்டு உள்ளவையே என்றெதுக்கி, மாதவி-கோவலன் உயவுபற்றியே காண்போம்.

மாதவி மாட்டு கோவலன சென்ற செய்தியை ஆராயப்புகுமுன் சில வரலாற்றுச் செய்திகளைத் தெரிந்துகொண்டால்தான் பயன்தரும். சிலப்பதி காரச் செய்திகள் நடைபெற்ற சூழலையும், காலத் தையும் நோக்குதல் பயனுடைத்தாம். கனகசபை பிள்ளை அவர்களால் "1800 ஆண்டுகட்கு முற் பட்ட தமிழகம்" என்ற தமது அரிய ஆராய்ச்சி நூலில் சிலப்பதிகாரத்தின் காலம் கி. பி. இரண் டாம் நூற்றுண்டு என்று வரையறை செய்துள் ளார்கள். கி. பி. இரண்டு என்ற வரையறை பொருந்தக்கூடியது என்று பெரும் அறிஞர்களும் ஒப்புவர். எனவே கி. பி. 2 என்றதொரு காலத் தில் தமிழகத்தில் நடைபெற்ற ஒரு வணிகக் குடும்ப வரலாறுதான் கவிஞர் செந்தமிழ்ச் செல் வர் இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகார மாகும்.

தமிழகம்-கி. பி. இரண்டுக்குமுன்......

கி. பி. இரண்டிற்குமுன் தமிழக மக்களின் நிலை என்ன? வரலாறு வடித்துத்தரும் வளமான தமிழக நிலை என்ன? தமிழ் மக்கள்வாழ்வுச்சூழல், வாழ்வு முறை என்ன? தமிழ் மக்களின் ஒழுக்க முறை என்ன? இவைபற்றிக் கூறும் வரலாற்று நூல் தமிழகத்தில் எஞ்சி இருப்பது ஒல்காப்புகழ் தொல்காப்பியம் ஒன்றே ஆகும். தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமன்று, வரலாற்று நூலும் ஆகும். தொல்காப்பியம் பொருள் அதிகாரத்துள் அகத்திணை இயல்-கற்பியல்-களவியல் பொருளி யல் ஆகிய நான்கு இயல்களில் தமிழக மக்களின் வாழ்க்கை வரலாறு வடித்துத் தரப்படுகின்றது.

தொல்காப்பியர் கி. மு. 4, 5 ஐச் சேர்ந்தவர் என்பார் நாவலர் டாக்டர் ச. சோ. பாரதியார். கால வரலாற்றை முழுக்க ஒப்புக்கொள்ள மறுக் கும் எவரும் தொல்காப்பியர் கி. பி. 2க்கு முற் பட்ட காலத்தவர் என்பதை ஏற்பர். இடைச் சங்க இலக்கண நூல் தொல்காப்பியம் என்பதால் கி. பி. 2க்குமுன் ஆகும். எனவே கி. பி. 2க்கு முற் பட்ட தமிழக நிலையை ஒட்டியே தொல்காப்பியர் இலக்கணம் எழுதியிருக்க வேண்டும். தொல் காப்பியம் எழுத்து; சொல் இரண்டையும் பொறுத் தவரையில் இலக்கணம் என்றுலும் பொருள் பற்றிச் சொல்லியுள்ளமை இலக்கணம், விதி என்று கொள்ளுதல் பொருந்தாது. பொருளதிகா ரத்தில் தலைவன்-தலைவி இருவரும் எத்தன்மை யுடையராயிருத்தல் வேண்டும்; இருவருக்கும் இடையே இழைந்தோடும் உறவு இவ்வாறுஇருக் கும்; தலைவனில் தாழ்ந்த குணம் படைத்தவன்-தலைவியில் கீழ்நிலைக் குணம் படைத்தவள்உண்டு என்றும்: தலைவன்-தலைவி இருவருக்கும் இடை யில் வரக்கூடியவள் பரத்தை என்றும், பரத்தை யர் மாட்டுத் தலைவன் பிரிதல் எப்பொழுது? அது முறையா, அன்று? என்னும் விளக்கமாக, அன் றையத் தமிழக நிலையை அழகுற விதிகள் என்ற பெயரில் தொல்காப்பியர் தொகுத்துத் தருகிறுர்.

ஒத்த தலைவனுக்குரிய பண்பு நலன்கள் பத்து வகைப்படும் என்றார்:

"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது
வகையே"

(தொல்-பொருள்-269 இளம்.)

தலைவனுக்குரிய இப்பத்துப் பண்பு நலன்களைத் தலைவி முழுதும் பெற்றுத்தான் இருத்தல் வேண் டும் என்பதில்லை; சில குறைந்தாலும் ஏற்கலாம் என்பார் தொல்காப்பியர். இவ்விலக்கண அமைப் புகளுக்குக் கோவலன்-கண்ணகி பொருந்தி வரு கிறுர்களா?

கோவலனை நமக்கு அறிமுகப்படுத்தும் முன் னமே கண்ணகி நல்லாளைக் கவிஞர் இளங்கோ அடிகள் காட்டும்போது,

"போதிலார் திருவினன்
புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின்
திறம் இவள்திறமென்றும்
மாதரார் தொழுதேத்த
வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகி."

என்றுர்.

> கட்டுரையாளர் திரு. கதிரவன் பி. ஏ. (ஆனர்சு) அவர்கள் மதுரை தியாகராசர் கல்லூரி தமிழ்த்துறையில் பணிபுரிகின்ற வர். இளம் ஆய்வாளர். சிலம் புத் தலைவனும் கோவலனைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையை இங்கு படைத்திருக்கிறுர். கோவ லன் குற்றமற்றவன் என்பதற் கான இலக்கிய - இலக்கணச் சான்றுகளை எடுத்துக் காட்டு கிறுர். (ஆ-ர்.)

கோவலனைக் கூறும்போது,

"மண்தேய்த்த புகழினன்
மதிமுக மடவார்தம்
பண் தேய்த்த
மொழியினராயத்துப் பாராட்டிக்
கொண்டேத்தும் செவ்வேளென்று
இசைபோக்கிச் காதலால்
பண்டேத்தும் கிழமையான் கோவல்ன்"

—என்று கூறுகிறுர். கண்ணகி திருமகளை ஒத்த வள்; அருந்ததிபோன்ற கற்புத்திறம் கொண் டவள்; பெண்கள் வணங்கக்கூடிய பெருங் குணங்களைப் பெற்றவள் என்றுர். ஆனல் தலைவ னுகிய கோவலனைக் குறிக்கும்பொழுது "மண் தேய்த்த புகழினன்" என்ற ஒரே தொடரிலேயே தொல்காப்பியர் வேண்டும் பத்துத் தலையாய பண்பு நலன்களையுடைய: புகழையுடையவன் என்று இளங்கோ அடிகள் கூறுமற் கூறுகிறுர். முருகனை ஒத்து அருங்குணம் மட்டும் படைத்த வன் என்பதல்ல-முருகு எனில் "அழகு" என்று பொருள் கொண்டு நல்ல அழகு படைத்தவன் என்றே கொள்ளலாம். அழகுடை மகளிரெல் லாம் கோவலனைக்கொள்ள அல்ல, காணுதற்குத் தவிக்கும் காதலனுய்க் கோவலனைக் காட்டு கிறுர்.

• இத்தகைய தன்மைகளுடைய இருவரது மணம் முடிந்து மனையறம் தொடங்குகிறது. கோவலன்-கண்ணகி இருவருக்கும் இடையில் உறவு சரியாக இல்லை என்பதாகச் சிலர் எண்ணு வதுண்டு. ஆனல் கோவலன் கண்ணகியை மணந்துகொண்ட அன்றே அறையிலே உல வாக்கட்டுரை ஒன்று கூறுவதாகக் காட்டுகிறுர். அதுமட்டுமல்ல; கண்ணகிக்கு இல்லற இன்பம் எவ்வாறிருந்தது என்பதை மனையறம்படுத்த காதையின் இறுதியில்,

"யாண்டுசில கழிந்தன
இற்பெருங்கிழமையின்
........கண்ணகி தனக்கென்."

—என்று குறிப்பிடுகிறுர். கண்ணகி-கோவலன் இருவரிடையேயும் அன்பொழுகக் காதல் தவழக் காமம் இருந்து, இன்பம் பெற்றனர் என்றே இவ் வரிகள் கூறுகின்றன. ஆனல் கூடிக்குலவிப் பெற்றது உடலின்பம் மட்டும்தான், உள்ளம் அந்த நிலையை எய்தவில்லை என்பதைத்தான் கோவலன், கண்ணகியைவிட்டுப் பிரிந்தது காட்டுகிறது. கண்ணகி நல்லாள் அழகுப்பதுமை, அன்புச்சுடர், அறிவுக்கொழுந்து, பணிவுள்ள அணங்கு. இவற்றில் குறைவில்லை. குறையா இன்பத்தைக் குழைவாகக் கோவலனுக்குக் கொடுத்தும் குலவிளக்கு ஒன்றினைக் கோவல னுக்குக் கண்ணகி நல்லாளால் தரக்கூடவில்லை. இளங்கோ அடிகள் இந்தச் செய்தியை யாண்டும் எடுத்துப் பேசாவிட்டாலும், பெண்ணின் இன்பம் மட்டும் கோவலனுக்குக் குறிக்கோளல்ல, குலம் விளங்கக் குழவி ஒன்றும் வேண்டும் என்ற எண்ணமும் உண்டு போலும் என்பதையே கோவலன்-மாதவிபால் மணிமேகலை பிறப்பும், அதற்கெனக் குன்றெனக் கொழிக்கும் செல்வத் தைக் கோவலன் வாரி இறைத்த செய்தியும் அரண் செய்கின்றன.

கோவலன் தன் குலம் விளங்கச் செல்வம் மட்டும் கருவியாகாது; குழந்தைச் செல்வமும் தேவை என்பதற்காக மாதவி மாட்டுப் பிரிந்தான் என்று இளங்கோ அடிகள் யாண்டும் எடுத்துக் கூறவில்லை. கூறவில்லை என்பதற்காக வெளிப் பட்ட உண்மையை மறைப்பதில் பயனில்லை.

கி. பி. இரண்டிற்கு முன் தமிழகத்தில் பரத்தை யர் நிலை என்ன? தலைவர்கள் தங்கள் கிழத் தியரைப் பிரிந்து காமக்கிழத்தியர் மாட்டு இன்பம் பெறுதல் உண்டா? அவ்வாறு பிரிந்து செல்வது வாழ்வில் இடையூறு தருதல் உண்டா? என்ற செய்திகளைத் தொல்காப்பியம் கொண்டு காண லாம். காமக்கிழத்தியர் என்போர் மூன்று வகைப் படுவர் என்பார் இளம்பூரணர். ஒத்தகிழத்தியர், இழிந்த கிழத்தியர், வரையப்பட்டார்-என்பர். எனவே இல்லக்கிழத்தியோடு காமக்கிழத்தியரும் இருந்ததால் இல்லறச் செயல் முறைகளில் இடையூறுகள் விளைந்ததாகக் காணேம். மேலும் தலைவி சில வேளைகளில் தலைவனல் காமக்கிழத் திக்கு நேரும் துன்பங்கட்குத்தானே தலைவனிடம் சமயம் வரும்போது எடுத்துக் கூறித் துயர் நீக்குவாள் என்றொரு சூத்திரம் தொல்காப்பியத் துள் காணப்படுகிறது.

"தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்மை யாக அவர்வயி னுணர்ந்தும்
தலைத்தாட் கழறல்தம் எதிர்ப்பொழு தின்றே
மலிதலும் ஊடலுா் அவையலங் கடையே."

(தொல்-பொருள்-231 இளம்.)

எனவே கோவலன் வாழ்ந்த கி. பி. இரண்டில் பரத்தையர் மாட்டுப் பிரிதல் மாண்பற்ற செயல் என்று கூறுதற்கில்லை. ஆனல் இன்று கி. பி. 20 இல் அவ்வாறு கோவலன் செய்தால் குற்றமட்டு மல்ல; அரசாங்கத்தால் தண்டனைக்கும் ஆட்படு வான் ஆனல் கி. பி. இரண்டில் வாழ்ந்த கோவ லன் செயல் தவறுடையதல்ல.

பரத்தையர் மாட்டு நால்வகை நிலத்து மக்க ளும் பிரியலாம் என்று ஒரு தனிச் சூத்திரம் இயற் றியுள்ளார் தொல்காப்பியர்.

"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனுர் புலவர்"

(-தொல்-பொருள்-220.).

எனவே பல பரத்தையர் மாட்டுக் கோவலன் பிரியவில்லை; ஒரே பெண்ணும் மாதவி மாட்டுத்

— 11-ம் பக்கம் —

மாணவர் மன்றக் கட்டட நிதி

தமிழ்த்தாத்தா மயிலை. சிவமுத்து அவர்களின் வேண்டுகோள்

நம் தமிழ்நாட்டு மாபெரும் செல்வர்களே! அறச்செயலையே குறிக்கோளாகக் கொண்டொழுகும் மடாதிபதிகளே! அரிய பெரிய கல்லூரிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும், பிற அறச்சாலைகளையும் நடாத்திவரும் அருள் உள்ளம் வாய்ந்த பேரறிஞர்களே! நம்நாட்டுக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் கவலை கொண்டுள்ள பொதுமக்களே, மாணவர் மன்றச் சார்பிலே கைகூப்பி வணக்கம் தெரிவித்து அனுப்பிவைக்கும் இந்த வேண்டுகோள் இதழினை ஒரு முறைக்கு இருமுறை உள அமைதியோடு படித்துப் பார்த்து நன்கு சிந்தித்து ஆவன புரிய வேண்டுமென்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தகையீர், இந்த மாணவர் மன்றமானது இருபத்தாறு ஆண்டுகளாக நமது மொழிக்காகவும், நம் நாட்டுக் குழந்தைகளுக்காகவும்பாடுபட்டு வருதலைத் தாங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் புலவர் வகுப்பு மாணவர்கள் வரையில் ஆடவர் மகளிர் இருபாலாரும் மன்றச் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலெல்லாம் ஆயிரக்கணக்கில் வந்து கலந்துகொண்டு பெரும்பயன் அடைந்து வருதலை நான் தங்களுக்குக்கூற வேண்டியதில்லை. பெண் குழந்தைகள், ஆண் குழந்தைகளோடு சரிசமமாக மேடைகளின்மீது நின்று பேசவும், கட்டுரைகள், கதைகள் அழகுபெற எழுதவும் வல்லவர்களாக இருத்தற்கு நமது மன்றம் முதற் காரணமாக இருந்ததை நான் தங்களுக்கு நினைவூட்டுகின்றேன். இந்த மன்றம் எந்தக் கட்சியிலும் கலந்துகொள்ளாமல் குழந்தைகளின் கல்வி அறிவை வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருதலையும் தாங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள். இந்த மன்றத்தில் இதுவரையில் ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தொடர்பு கொண்டிருக்கின்றனர். வடவேங்கடம் முதல் கன்னியாகுமரி ஈறுக உள்ள எல்லா இடங்களிலும் உள்ள குழந்தைகளுக்கும் இந்த மன்றம் அறிவு விளக்கத் தொண்டினைப் புரிந்துவருகின்றது. நம் தமிழ்நாட்டுக்கு அப்பாற்பட்ட பம்பாய், டில்லி, கல்கத்தா, சிலோன், மலேயா, முதலிய பல பகுதிகளிலிருந்தும் பெரியோரும், சிறியோரும், மன்றத்தின் உறுப்பினராக இருக்கின்றனர். குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்காக இம்மன்றத்தினர்மேற்கொள்ளும் எல்லா நிகழ்ச்சிகளிலும், கல்லூரிப் பேராசிரியர்கள், உயர் பள்ளித்தலைவர்கள், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் முதலிய அனைவரும் கலந்துகொண்டு பேருதவி புரிவதோடு ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பாராட்டுக் கடிதங்களையும் வரைந்து விடுக்கின்றனர். கல்வி இலாகா அதிகாரிகள், மந்திரிமார்கள், பிற பெரும்பதவியிலுள்ள பேரறிஞர்கள் அனைவரும் இம்மன்றத்தின் கொள்கைகளையும் செயல்களையும் பலப்படப் பாராட்டி இருக்கின்றனர். நம் நாட்டிலுள்ள தினசரிப் பத்திரிகைகள், வார வெளியீடுகள், திங்கள் இதழ்கள் முதலிய யாவும், மன்ற நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்துத் தங்கள் கருத்துக்களைச் சிறந்த முறையில் பாராட்டியிருக்கின்றன. சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு ஆடல் பாடல்களின்மூலம் அறிவு புகட்டி வருதலை நம் சென்னை மாநகரிலுள்ள பெற்றோர்களுள் பெரும்பாலார் நேரில் கண்டுகளித்துப் பாராட்டி வருகின்றனர். கதை எழுதுதற்கும் கட்டுரைகள் வரைதற்கும், ஓவியங்கள் தீட்டி அனுப்புதற்கும், மாணவ மாணவிகள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கிலே பங்கு கொண்டு பயனடைகின்றனர். E. S. L. C., S. S. L. C., P. U. C., B. A. முதலிய வகுப்பு மாணவ மாணவிகளுக்காக நாங்கள் நடத்திவரும் தேர்வினைக் குறித்து நாங்கள் தங்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. இந்தத் தேர்வு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாத பள்ளிகள் மிகவும் சிலவே ஆகும். அரசாங்கத் தேர்வுக்கு எங்கள் தேர்வு பேருதவியாக இருக்கின்றது என்பதை ஆசிரியர்களும் மாணவர்களும் மிகவும் மகிழ்ச்சியோடு கடித மூலமாகவும், நேரிலும் தெரிவித்து வருகிறார்கள். நாங்கள் நடத்தும் தேர்விலும், பிற நிகழ்ச்சிகளிலும் ஆண்டுதோறும் கலந்துகொள்ளும் குழந்தைகளும் ஏறத்தாழ முப்பதினாயிரத்திற்கு மேற்பட்டவர் என்றால் அது மிகையாகாது. இத்தகைய அரிய பெரிய செயல்களை நாங்கள் மிகவும் சிக்கனமான முறையிலேயே நடத்திவருகின்றோம்.

குழந்தைகளுக்குத் தின்பண்டம் வழங்குதல், ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தல். பலப்பல விழாக்கள் கொண்டாடுதல், சொற்பொழிவு நிகழ்த்துதல், நூல் நிலையத்தின்மூலம் மக்கள் அறிவை வளர்த்தல், இன்பத் தரைச்செலவு புரிதல்,பலவகையான தேர்வுகள் நடத்துதல், வெள்ளிப் பதக்கம், வெள்ளிக்கோப்பை, பொற்பதக்கம், அரிய தமிழ்நூல்கள், பணமுடிப்புக்கள், முதலியன பரிசாக உதவுதல் முதலிய பலவற்றிற்கும் எங்களுக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கிலே பொருள் செலவாகின்றது. குழந்தைகளிடம் கட்டணமாகப் பெறும் தொகை போதாமல் ஆண்டுதோறும் பொதுமக்களிடத்தும் சென்று பொருள் தொகுத்து மன்றச்செயல்களை நடத்திவரும் நிலையிலேயே நாங்கள் இருக்கின்றோம். உறுப்பினர் கட்டணமோ, அவர்கட்கு அவ்வப்போது அனுப்பிவைக்கம்பெறும் இதழ்கள் அச்சிடுவதற்கும், அஞ்சல் செலவுக்கும் சரிசெய்ய வேண்டி நேர்கிறது. சுமார் நான்கைந்து ஆண்டுகளாகத்தான் மன்ற வருவாயிலிருந்து ஒரு சிறு பகுதியையேனும் சேமித்து வைக்கவேண்டும் என்று நாங்கள் பெரிதும் முயன்று வருகின்றோம்.எனினும் காகிதம்,அச்சுக்கூலி, அஞ்சல் செலவு முதலியன ஆண்டுதோறும் உயர்ந்து வருவதால் நாங்கள் எண்ணுகின்ற அளவில் பொருளைச் சேமித்து வைக்க எங்களால் சிறிதும் இயலவில்லை. மன்றத்திற்கெனச் சொந்தமாக ஓர் நிலையம் இருந்தால் அதன் மூலம் நாங்கள் எவ்வளவோ செயல்களை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றிக்காட்ட முன் வருவோம். அரசாங்கம் உதவுவதாக வாக்களித்த நிலம் அண்மையில் வருவதாக இல்லை. நாட்டிலுள்ள செல்வர்களும் மடாதிபதிகளும்பொது மக்களும் மனம் வைத்தால் இந்த மன்றத்திற்கு ஒரு கட்டடம் மிக இலகுவில் அமைந்துவிடும். போதிய இடம் இல்லாமையினாலே, நூல் நிலையத்தினை ஒழுங்காக நடத்துவதற்கு இயலாதவர்களாயிருக்கிறோம். மன்றத்திற்கென ஒரு தனிக் கட்டடம் இருந்தால் மாத வெளியீடு, நூல் வெளியீடு முதலியன நல்ல முறையில் நடத்திக் குழந்தைகளுக்குப் பல வகைகளிலும் எங்களால் மேன்மேலும் அறிவை வளர்க்க இயலும். இருபத்தாறு ஆண்டுகளாக இடையறாது உழைத்த பிறகே நாங்கள் தங்களிடம் இந்த வேண்டுகோளை விடுகின்றோம். வெள்ளி விழாவிற்காகச் சில கல்லூரித் தலைவர்களும் உயர் நிலைப்பள்ளியைச் சார்ந்தவர்களும், பிற செல்வர்களும் ஓர் அளவு பொருளுதவி செய்துள்ளார்கள் அவர்கள் அனைவர்க்கும் மன்றச் சார்பிலே நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இவ்வேண்டுகோளைக் கண்ணுறும் கல்வித் தலைவர்களும், பொதுமக்களும் சிறிது கனிவு காட்டுவார்களானால் எங்கள் எண்ணம் மிக எளிதில் ஈடேறும். சிறு துளி பெரு வெள்ளம் எனும் முறையில் இம்மன்றத்தின் மூலம் பயன் பெறும் குழந்தைகள் தங்களால் இயன்ற காசுகளை அன்போடு உதவுவார்களேயானால் அதுவே பேருதவியாக எங்கட்கு அமைந்துவிடும். எனினும் குழந்தைகளையே அதிகமாகத் துன்புறுத்த நாங்கள் விரும்பவில்லை ஆசிரியர்கள் தமக்குத் தெரிந்த செல்வர்கள் மூலம் பொருள் திரட்டித் தருவார்களானால் அது எங்களுக்குப் பேருதவியாக இருக்கும். திரட்டித் தரவும் இயலாதவர்கள் தமக்கு அக்கம் பக்கத்திலுள்ள அருட்குணம் வாய்ந்த அன்பர்களின் முகவரியைத் தெரிவித்தாலும் நாங்கள் நேரிலே, கடிதம் மூலமாகவோ அவர்களிடமிருந்து பொருளுதவி பெறுதல் கூடும். முதலில் மன்றத்திற்கென ஒரு நிலம் வேண்டும். அதன் பின்னரே கட்டடம் அமைப்பதற்கு முயலுதல் வேண்டும். நல்ல இடத்திலே வசதியான இடம் பெறுவதற்கு குறைந்தது பத்தாயிரம் ரூபாய்களாவது வேண்டும். அருள் உள்ளம் வாய்ந்த செல்வர்களே, அறநிலையக் காப்பாளர்களே, மாணவர் மன்றத்தலைவனாகிய நான் இந்த முதுமைப் பருவத்திலும் ஏதோ என்னால் இயன்ற வகையிலே எந்தக் கட்சியிலும் பங்கு கொள்ளாமல் குழந்தைகளின் அறிவு நலம் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு இரவும் பகலுமாகப் பாடுபட்டு வருதலை நான் தங்களுக்கு விளக்கித் தெரிவிக்க வேண்டுவதில்லை. என் உடல் நன்னிலையில் இல்லாமையால் நீண்ட நாள் இருந்து பணியாற்ற இயலாத நிலையில் நான் இருக்கின்றேன். தம் வாழ்நாட்களைப் பொது நலத்துக்காகவே ஈடுபடுத்தி வரும் டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்களோ படுத்த படுக்கையாக இருக்கின்றார்கள்.

அவர்கள் காலத்திலேயே மாணவர் மன்றத்திற்கு உரிமையான ஒரு கட்டடம் ஏற்பட்டுவிடுமானால் அது அவர்களுக்கு எவ்வளவோ மன ஆறுதலைத் தரும். பேரறிஞர்களே! பெருஞ்செல்வர்களே! மாணவ மணிகளே! அருளுள்ளம் வாய்ந்த பொதுமக்களே! நானும் டாக்டர் அம்மையாரும் உயிருடன் இருக்கும்போதே மாணவர் மன்றத்திற்கு ஒரு நிலையான கட்டடம் ஏற்பட்டால் எங்கட்கு ஆறுதலும் மகிழ்ச்சியும் விளையும். அதனை ஏற்படுத்துவது உங்கள் பொறுப்பாக இருக்கின்றது. இந்தப் பேருதவியினை நீங்கள் பொருளுதவி மூலமாகவும், வாக்குதவி மூலமாகவும், நிறைவேற்றி வைக்கலாம். மாணவர் மன்றம் மொழிக்காகவும், குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்காகவும் மேலும் பலப்பல வழிகளில் பாடுபடும் என்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன். மன்ற வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றவர்கள் தெரிவிக்கும் எதையும் நன்கு சிந்தித்துப் பார்த்து மன்றத்தின் செயலுறுப்பினர்கள் ஆவன புரிந்து வருகின்றனர். ஆட்சியாளர்களும், கல்வித்துறைத் தலைவர்களும், குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்காக என்னென்ன தெரிவிக்கின்றார்களோ அவற்றையெல்லாம் இந்த மன்றம் கூடுமான வகையிலே செயலாற்றவே முற்பட்டு வருகின்றது. இத்தகைய ஒரு அருமையான மன்றம் தக்க சேமிப்பு இல்லாமையாலும், இருந்து பணியாற்றுவதற்கு உரிமையான இடமின்மையாலும் அழிந்து படுமோ என நான் பெரிதும் கவலை கொள்ளுகின்றேன் எவ்வளவு சிறிய தொகையாயிருப்பினும்உளமுவந்து உடனே உதவும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன் பொருளாகவோ, நிலமாகவோ கட்டடமாகவோ வேறு எந்த வகையில் உதவினாலும் நாங்கள் அதனை நன்றியறிதலோடு ஏற்றுக்கொண்டு அரசாங்கச் சட்டதிட்டங்கட்கு ஏற்ப ஒழுங்கான முறையிலே பாதுகாத்து வருவோம் என்று நான் மன்றச் சார்பிலே உறுதி கூறுகின்றேன்.

இங்ஙனம்,

மயிலை. சிவமுத்து,
தலைவர்,

இவர் தான்
எம். ஜி. ஆர்.
6-9-58ம் தேதி இதழில்
ஆரம்பமாகிறது!

ஊமையன் கோட்டை

கண்ணதாசன்

முன்னுரை

சரித்திரம் வேடிக்கையான ஒரு கதைக்கோவை. ஒவ்வொரு மன்னனின் குணாதிசயங்களினாலும், ஒவ்வொரு மண்டலமும் வளர்ந்தோ தளர்ந்தோ, மாட்சி பெற்றோ, வீழ்ச்சியுற்றோ மாறுதல் அடைந்திருக்கிறது. தமிழகத்தின் வரலாற்றைப்பொறுத்த வரையில் மொத்தத் தமிழகத்தின் சுயமரியாதையைக் காப்பாற்றவோ, தமிழகம் என்கின்ற பொது அடிப்படையில் போர் புரியவோ எழுந்த மன்னர்கள் குறைவு. சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்ற ஒரு செய்தியைத் தவிர, பிறசெய்திகள் தமிழகத்தின் பெருமைக்காகப் பாடுபட்டவர்களைக் காட்டவில்லை. தமிழன் என்கின்ற அடிப்படையில் போர் புரிவதானால் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது இரண்டு போர் வீதம், ஒவ்வொரு ஆண்டிலும் போர் நடந்திருக்கக்கூடாது. அவரவர் நிலத்தையும், அவரவர் பெருமைகளையும் வளர்ப்பதற்கென்றே வரலாறு நெடுகிலும் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன.

18-ம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலும், பிற்பகுதியிலும் ஏராளமான போர்களிலும், தகராறுகளிலும் ஈடுபட்ட கட்டபொம்மன் பரம்பரையினரையும் இந்தக் கண்கொண்டுதான் நாம் நோக்க வேண்டும். தங்கள் நிலத்துக்காகத்தான் அவர்கள் போராடினார்கள் என்பது, அவர்கள் வீரர்கள் என்பதற்குரிய மரியாதையைக் குறைத்துவிடாது. ஒரு வீரனைப் புதிதாக உருவகப்படுத்தும்போது வேண்டுமானால், நாம் நினைக்கின்ற சகல 'கல்யாண குணங்க'ளையும் அவனுக்குத் தந்துவிட முடியும். வரலாற்றில் இருக்கின்ற ஒரு வீரனைப் பற்றிப் பேச வருகின்றபோது, அவனது வீரமிக்க செயற்பாடுகள் மட்டுமே நம் கவனத்தில் நிற்க வேண்டும்.

இந்தக் கதையை எழுத ஆரம்பித்திருக்கிற எனக்கு கட்டபொம்மன் பரம்பரையினர் தமிழர்களா, தெலுங்கர்களா என்பதில் அக்கரையில்லை. தோழர் ம. பொ. சி. சொல்வதுபோல் கட்டபொம்மனையும். ஊமைத்துரையையும் மொத்தத் தமிழகத்தின் சுதந்திரத்துக்காகப் போராடியவர்கள் என்று நான் ஒப்புக்கொள்ளவில்லை. புதிதாக ஆரம்பித்திருக்கிற வாதம்போல், அவர்கள் வெறும் கொள்ளைக்காரர்களே என்றும் நான் நினைக்கவில்லை. எந்த ஒரு காரணத்திற்காக அவர்கள் போராடியிருந்த போதிலும், அப்படிப் போராடுகிற திறமையும், துணிச்சலும் அவர்களுக்கு இருந்ததே, அதைத்தான் நான் என் கதைக்கு நிலைக்களனாகக் கொள்கிறேன்.

இந்தக் கதை கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாளுக்குப் பதினைந்து மாதங்களுக்குப் பிறகு ஆரம்பமாகிறது. ஊமைத்துரையே இந்தக் கதையின் நடுநாயகம். கட்டபொம்மனை வெறுக்கின்றவர்கள்கூட ஊமைத்துரையை மதிப்பது வெளிப்படை. ஊமைத்துரையை விடுவிப்பதற்கு ஏராளமான இளைஞர்கள் முயன்றார்கள் என்ற வரலாற்றைப் படிப்பவர்கள், ஊமைத்துரையையும் கொள்ளைக்காரனாக மதிப்பிட்டுவிட முடியாது. ஒரு கொள்ளைக்காரனுக்கு இவ்வளவு பொதுமக்கள் ஆதரவு கிடைத்திருக்க நியாயமில்லை. பாளையங்கோட்டைச் சிறைஉடைப்பு முறையான ஒரு போரல்ல. திட்டமிட்டுத்தான் செய்யப்பட்டதென்றாலும் பொதுமக்கள் நடத்திய 'கொரில்லாப்போர்' அது. அவனது விடுதலைக்குப்பின்னால் இடிந்துபோனகோட்டை ஏழே நாட்களில் முன்னிலும் பலம் பொருந்தியதாகப் புத்துயிர் பெற்றதென்றால் பொதுமக்கள் ஆதரவில்லாமல் இது நடந்திருக்க நியாயமில்லை. ஆகவே, என் கதைக்கு நடுநாயகமாக நான் எடுத்துக்கொண்ட பாத்திரம் மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு தலைவனாகும். அந்தத் தலைவனையும், அவன் புதிதாக எழுப்பிய கோட்டையையும் சுற்றித்தான் என் கதை பின்னப்பட்டிருக்கிறது. என்றாலும், வெறும் வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்ததைக்கூறிமுடித்துவிட்டால், கதை அங்கமே இல்லாமல் போய்விடும். மேலைநாட்டுப் பெருங்கதை ஆசிரியர்கள் வழியில், சரித்திரத் தலைவனை மையமாக வைத்துக்கொண்டு புதிய பாத்திரங்களைப் பின்னியிருக்கிறேன். 'ஏழை படும் பாடு', 'இளிச்சவாயன்', 'அன்னை' முதலிய பெருங் கதைகளைப்போல் இதுவும் புதிய பாத்திரங்களாலேயே பெரும்பாலும் ஓட்டிச் செல்லப்படும் ஒரு கதைதான்.

குடும்பத்திலிருக்கும் பெண்களும் சிறுவர்களும்கூட படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கதை சொல்லும் பாணியிலேயே நடையை அமைத்துக்கொண்டிருக்கிறேன். வீரர்களான கதா பாத்திரங்கள் எப்போதும்வீரமுழக்கமிட்டுக்கொண்டே இருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. சராசரி மனித உணர்ச்சியின் படி, அவர்களுக்கும் ஆசாபாசங்கள், கோபதாபங்கள், விருப்பு வெறுப்புகள் இருக்கத்தான் செய்யும். வீரன் கடிப்பதால் மிளகாய் இனிக்காது. வீரன் வெறுப்பதால் சர்க்கரை கசக்காது. அந்த வீரனுக்கும் உள்ளார பரிதாபகரமான கோழைத்தனம் ஒன்று இருக்கும். பாச உணர்ச்சிகளோடு, வீரத்தால் விளைந்தவேதனை மோதும்போது, அந்தக் கோழைத்தனம் அவனையும் மீறித் தலை தூக்கும். இதை மனதில் நிறுத்திக் கொண்டுதான், நீங்கள் கதைப் பாதையில் நடக்க வேண்டும்.

வீரத்தேவன், காணாமற் போன அவன் தங்கை கண்ணாத்தாள், சிங்கத்தேவன், அஞ்சுகம் இவர்களும் இன்னும் சிலரும் நான் உருவாக்கிக் கொண்ட புதிய பாத்திரங்கள். இனி, கட்டபொம்மனைச் சுடுகாட்டில் சந்தித்துவிட்டு, பதினைந்து மாதங்களைக் கடந்து நடப்போம்....

1

பள்ளி எழுச்சி

திருநெல்வேலிச் சீமையில் மணியாச்சி என்றொரு குறுநிலம். அதிலிருந்து மூன்றுகல் தொலைவில் ஒட்டநத்தம் என்றொரு குக்கிராமம். கரிசல் காடுகளே நிறைந்த பூமி அது. பருத்தியும் பாசிப்பயறும் அந்தக் கிராமத்தில் முக்கியப் பொருள்கள். பூமியெல்லாம் கூழாங்கற்கள். கரிசல் காட்டின் இடையிடையே வேல மரங்கள். கிராமத்திற்குள் நுழைந்ததும் முதன் முதலாகத் தென்படுவது, ஆறடி உயரத்தில் செங்குத்தாகக் கட்டப்பட்ட ஒரு சமாதி. கணவனோடு உடன்கட்டை ஏறிய ஒரு நாயக்கப் பெண்ணின் சமாதி அது. **முத்தம்மாள்** என்ற அந்தப் பெண்ணை முத்துமாரி அம்மன் என்று ஒட்டநத்தம் வணங்கும். கிராமத்தைச் சுற்றிலும் மிகப் பெரிய அகழி. இடையிலே சுமார் இருநூறு அடிமட்டுமே சுற்றளவுள்ள ஒரு சிறு கோட்டை. அதைச் சுற்றிலும் சோளவைக்கோல் வேயப்பெற்ற குடிசைகள். இரண்டொரு மாடி வீடுகள். கோட்டையின் வலது புறத்தில் ஒரு கேணி. ஊர்ப் பொதுக் கேணி அது. பனைஓலையால் வாளி செய்து, ஊர்ப்பெண்கள் அந்தக் கேணியிலே தண்ணீர் எடுப்பார்கள். மலர்க்கொடிகள் இல்லாவிட்டாலும், பசுமை நிறைந்த நெல்வயல்களைக் காண முடியாவிட்டாலும் அந்தக் கரிசல் காட்டுபூமி, வளம்நிறைந்த கழனியாகவே காட்சி தந்தது.

1801-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் தேதி...

இரவு மணி ஏழு இருக்கும். ஒட்டநத்தத்தின் தெருக்களிலே தெரு விளக்குகள் மின்னிக்கொண்டிருந்தன. என்றைக்குமில்லாதவண்ணம், அந்தக் கிராமத்தில் ஆட்கள் முன்னும் பின்னும்போய்வந்துகொண்டிருந்தார்கள். கயத்தாறிலே **கட்டபொம்மன்** தூக்கிலிடப்பட்டு, ஏறக்குறைய பதினைந்து மாதங்கள் முடிந்திருந்ததால், நாயக்கவம்சத்தினரின் நடமாட்டங்களை ஒற்றர்கள் கண்காணிப்பது அறவே இல்லாமலிருந்தது. திருநெல்வேலிச் சீமையில் தெளிவான சூழ்நிலை நிலவுவதாகவே, கும்பினியார் கருதிக்கொண்டிருந்தார்கள். **பாஞ்சாலங்குறிச்சிக்** கோட்டை இருந்த இடத்தில் வெறும் முட்புதர்களே நிறைந்திருந்தன. இருந்தும் வாலிபர்களது உள்ளங்களில் கோபமும், கொந்தளிப்பும் ஏற்பட்டிருந்தது. அவர்களில் ஒரு பகுதியினர்தான் அன்று ஒட்டநத்தத்தில் கூடி, வெள்ளையருக்கு எதிராக ஒரு முடிவெடுக்கத் திட்டமிட்டிருந்தனர். பாளையங்கோட்டைச் சிறையில் பதினைந்து மாத காலமாக வாடிக்கொண்டிருக்கும் **ஊமைத்துரையையும்**, அவன் தம்பி **சிவத்தையாவையும்** விடுவிக்க விழைந்தனர்.

மணி எட்டு இருக்கும்! அங்குமிங்குமாக உலவிக் கொண்டிருந்த இளைஞர்கள், கிராமத்தின் மையப்பகுதிக்கு வந்து சேர்ந்தனர். ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக்கொண்டனர். எதிரிகளுக்கு உளவு சொல்வோர் யாரேனும் தங்களோடு கலந்துவிடக்கூடாதே



என்பதில் அவர்கள் நிதானமாக இருந்தனர். அவர்களுக்கெல்லாம் தலைவன்போல் இருந்தான் ஒரு இளைஞன். உயர்ந்த உருவம்; பரந்த மார்பு; திரண்டதோள்கள்; துடிக்கும் அரும்புமீசை; பரபரப்பான தோற்றம். அந்த இளைஞன் பெயர் **வீரத்தேவன்**. சிவகெங்கை மறவர்குடியிலே பிறந்தவன். அவனது தந்தை **இராமலிங்கத்தேவர்**. கட்டபொம்மனுக்கு வலதுகரமாக விளங்கியவர் அவர். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதும், வெள்ளையார்களால் கொன்று மறைக்கப்பட்டவர்களில் வீரத்தேவனின் தந்தை இராமலிங்கத்தேவரும் ஒருவர். நாட்டு விடுதலையில் ஆர்வமும், தந்தையைக் கொன்றவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற உணர்ச்சியும், ஊமைத்துரையிடம் உள்ள அன்பும் சேர்ந்து, வீரத்தேவனை இந்தக் காரியத்தில் ஈடுபடத் தூண்டின.

இராமநாதபுரம் 'இராமலிங்க விலாச'த்தில் கட்டபொம்மனுக்கும் வெள்ளையருக்கும் தகராறு நேர்ந்த காலத்திலிருந்து ஊமைத்துரையோடு வீரத்தேவனுக்குப் பழக்கம் உண்டு. இராமலிங்கத்தேவர் கட்டபொம்மனுக்கு உயிர்த்தோழராக விளங்கியது போல், வீரத்தேவன் ஊமைத்துரைக்கு உயிர்த்தோழனாக விளங்கினான்.

வாலிபர்கள் எல்லோரும் அமைதியாக அமர்ந்தனர். ஒட்டநத்தம் சுப்பா நாயக்கர், **சின்ன** வேட்டூர் நாயக்கர், குளத்தூர், காடல்குடி பாளையக்காரர்களின் பிரதிநிதிகள் ஆகிய முதியவர்களும் அந்தக் கூட்டத்தில் நீண்ட நாற்காலி போட்டு அமர்ந்திருந்தனர். ஊர்ப்பெண்கள் எல்லோரும் அங்கு நடப்பதைக் கவனிப்பதற்காக ஒருபுறத்திலே கூடியிருந்தனர். கூட்டத்திற்கு எதிரே மூன்று தெருவிளக்குகள் அருகருகாக அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை மையமாகக்கொண்டு, ஒரு மேடை எழுப்பப்பட்டிருந்தது. வீரத்தேவன் அந்த மேடை மீது ஏறி நின்றுகொண்டான். நாற்காலியில் அமர்ந்திருந்த பெரியவர்களை ஒருமுறைபார்த்து மௌனம் சாதித்தான். உடனே ஒட்டநத்தம் சுப்பா நாயக்கர் 'சும்மா சொல்லவேண்டியதைச் சொல்லு, தம்பி. நீ சொல்றதையே நாங்களும் முடிவா வச்சுக்கிறோம்' என்றார். வீரத்தேவன் பேச ஆரம்பித்தான்:

'என் சகோதரர்களே! பெரியவர்களே! கடந்த பதினைந்து மாத காலமாக ஊமைச்சாமியும், சிவத்தையாவும் பாளையங்கோட்டைச் சிறையில் கிடந்து அவதிப்படுகிறார்கள். ஒரு தலைவனுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான மரியாதைகூட சிறைச்சாலையில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இனி எதிர்ப்பே இருக்காது என்கிற முடிவுக்கு வெள்ளைக்காரர்கள் வந்திருக்கிறார்கள். வெள்ளைக்காரர்களுடைய நேரடி ஒற்றர்கள் ஓய்ந்துவிட்டாலும், எட்டயபுரம் நாயக்கரும், ஊத்துக்குளிக்காரரும் தங்கள் ஒற்றர்களை எச்சரிக்கை செய்துகொண்டேயிருக்கிறார்கள். இந்த நேரத்தில் எப்படிப் புரட்சிகரமாகச் செயல்படுவது என்பதை முடிவு கட்டவே நாம் இங்கு கூடியுள்ளோம். கடந்த எட்டு ஆண்டுகளில், நம்மிலே பல குடும்பங்கள் போரிலே தலைவர்களை இழந்துவிட்டன. இறந்துபோனவர்களின் எண்ணிக்கையிலே நாமும் சேரவேண்டியிருக்கும் என்ற முடிவோடுதான், இந்தக் காரியத்தில் நாம் ஈடுபடவேண்டும். சந்தர்ப்ப வசமாக, சூழ்நிலை நமக்குச் சாதகமாக இருக்கிறது. கயத்தாரிலும், சங்கரநயினார் கோயிலிலும், பாளையங் கோட்டையிலும் மட்டுமே வெள்ளைக்காரர்களுடைய சிறு சிறு படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மேஜர் **மெக்காலே** மிகுந்த நம்பிக்கையோடு ஏராளமான வெள்ளைப் பட்டாளங்களைத் திருச்சிக்கு அழைத்துக் கொண்டு விட்டான். இப்போது நம்முடைய எண்ணிக்கையை விட வெள்ளைக்காரப் படைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆகவே, துணிந்து பாளையங்கோட்டைச் சிறைச்சாலையைத் தாக்கினால், ஊமைச்சாமியையும் சிவத்தையாவையும் விடுதலை செய்துவிட முடியும். பொம்மு நாயக்கர் வெள்ளைக்காரர்களோடு பொருதியபோது, சில பாளையக்காரர்களை ஒன்று சேர்ப்பதில் நாம் பின்தங்கி விட்டோம். இப்போது எட்டயபுரத்தில் இருக்கின்ற சில இளைஞர்களே நம்மோடு சேருவதில் அக்கறை காட்டுகிறார்கள். புதுக்கோட்டை அம்பலகாரர்களின் பங்காளிகளை எல்லாம் பதினைந்து நாட்களுக்கு முன்னால் நான் சந்தித்தேன். அவர்கள் நேரடியாக இதில் ஈடுபடுவதற்குப் பயப்பட்டாலும், பொருளுதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். சிவகெங்கை ராஜா **வெள்ளைமருது சேர்வைகாரரும்**, அவர் தம்பி **சின்ன மருது சேர்வைகாரரும்** கும்பினியாருக்குக் குத்தகைப் பணம் கொடுத்துக் கொண்டிருந்த போதிலும், நமக்கு வேண்டிய உதவிகளை மறைமுகமாகச் செய்யக் கூடும். ஆனால் சிறையை உடைப்பதற்கு மருதுசேர்வையின் உதவியைப் பெறவேண்டாம் என்று நான் கருதுகிறேன். காரணம், ஊமைச்சாமி விடுதலையானதும் மறுபடியும் மருது சேர்வையின் உதவியையே நாடவேண்டியிருக்கும். சின்னமருது சேர்வை இதில் அதிக அக்கரை காட்டினாலும், வெள்ளைமருது சேர்வைக்குக் கொஞ்சம் பயமிருக்கிறது. சிவகெங்கையில் இப்போது நிலவும் அமைதியைக் கெடுக்க அவர் விரும்பவில்லை. அதனால், விடுதலைக்குப் பிறகு ஆகவேண்டிய காரியங்களுக்கு மட்டுமே அவர்கள் உதவியை நாடலாம் என்று நான் நினைக்கிறேன். இல்லை, இப்பொழுதே அந்த உதவி தேவை என்று நீங்கள் நினைத்தாலும், சிவகெங்கைக்கு நானே

போய்வரச் சித்தமாயிருக்கிறேன்!''

—வீரத்தேவன் இப்படிக்கூறிவிட்டு, மற்றவர்களின் கருத்தை அறிவதற்காகச் சற்று மௌனம் சாதித்தான். உடனே **சின்ன வேட்டுர் நாயக்கர்** எழுந்து, 'சிறையை உடைப்பதற்கு சேர்வைகாரரைத் தொல்லை செய்ய வேண்டாம்; ஊமைத்துரை வெளியில் வந்ததும் சிவகெங்கையின் உதவியை எப்படிப் பெறுவது, எந்தக் காரியத்துக்காகப் பெறுவது, என்பதை முடிவு கட்டிக் கொள்ளலாம். ஏழாயிரம் பண்ணையிலிருந்துப், குளத்தூரிலிருந்தும், காடல்குடியிலிருந்தும் குறைந்தது பதினையாயிரம் பேரையாவது பாளையங்கோட்டைக்குத் திரட்டிவர என்னால் முடியும்' என்றார்.

கூட்டத்திலிருந்த வாலிபர்கள் கைதட்டி அதை வரவேற்றார்கள். உடனே சுப்பா நாயக்கர் பயம் நிறைந்தவராய், 'யாரும் கை தட்டாதீர்கள்' என்று எச்சரித்தார். வீரத்தேவன் மேலும் பேசினான் :

'பொதுவில் மறவர் மக்களின் உதவியை எந்த நேரத்திலும் பெற்றுத்தர என்னால்முடியும். மறவர்களுக்கும், கம்பளத்தாருக்குமிடையே பழைய விரோத பாவங்கள் எதுவும் இப்போது இல்லை. ஆகவே, குறைந்தது இருபது நாட்களுக்குள் பாளையங்கோட்டைச் சிறையைத் தகர்த்தெறிவதில் நாம் அக்கரை காட்ட வேண்டும். கும்பாடியில், சுப்பிரமணிய நாயக்கர் தலைமையில் நடந்த கூட்டத்திலும், சில்லாங்குளத்தில் நடந்த கூட்டத்திலும் நாம் பேசிக்கொண்டபடி, பாளையங்கோட்டையில் சந்தை நடக்கும் தினத்தில், பல்வேறு வகையான வியாபாரிகளைப்போல் ஆயுதங்களை மறைத்துக் கொண்டு பாளையங்கோட்டை சிறைக்கு எதிரே கூடவேண்டும். நம் அருமைச் சகோதரர் சிங்கத்தேவர் இதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து தருவார். ஊமைத்துரைச்சாமிக்கு உயிருக்குயிராய் விளங்கும் அவர் இன்னும் இங்குவந்து சேராததுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது!''

—வீரத்தேவன் இப்படிச் சொன்னதும், கூட்டத்தில் 'கசமுச' என்னும் சத்தம் எழுந்தது. ஒவ்வொருவரும் திருப்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள். சிங்கத்தேவர் ஏன் வரவில்லை என்ற கேள்விக்குறி அவர்கள் முகத்தில் படர்ந்தது. வந்துவிடக் கூடும் என்ற ஆவலில், சிலர் பாதையையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களது ஆர்வத்தைக் கவனித்த வீரத்தேவன், மேலும் பேசினான் :



'ஒருவேளை, பாளையங்கோட்டையில் சிங்கத்தேவருக்கு அலுவல்கள் இருக்கலாம். அங்கேயிருந்துகொண்டும் அவர் இந்தக் காரியங்களைத்தான் கவனிப்பார். எதற்கும் இன்னும் பதினேழு நாட்களில்—பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதியன்று—நீங்கள் எல்லோரும் காலையிலேயே பாளையங்கோட்டைக்கு வந்துவிடவேண்டும். ஒவ்வொருவரும் சிங்கத்தேவர் வீட்டிற்குப் போய், எத்தனை மணிக்கு, என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு சிறைச்சாலை அருகில் போவது நலம். அதற்கிடையில் இனி நாம் சந்திக்கப் போவதில்லை. இந்தக் கூட்டத்தையே கடைசிக் கூட்டமாகக் கருதுங்கள். அடுத்தது செயல்தான். கவனமிருக்கட்டும். பிப்ரவரி 2-ம் தேதி, இதே தை மாதம் 20-ம் தேதி நாமெல்லாம் பாளையங்கோட்டையில் சந்திக்கிறோம். அதற்கிடையில், யாரும் எதைப்பற்றியும் மூச்சுவிடக் கூடாது. எதிரிகள் வெள்ளைக்காரர்கள் மட்டுமல்ல; நம் அருகிலேயே பலர் இருக்கிறார்கள். இந்தக் காரியம் முடியும்வரை, இதைப்பற்றிக் குடும்பத்தில் கூடப் பேசாமலிருப்பது நல்லது. வணக்கம்!''

—வீரத்தேவன் பேசி முடித்துவிட்டு இறங்கினான். இளைஞர்கள் எல்லோரும் எழுந்தார்கள். பெண்களெல்லாம் தம் வீடுகளுக்குத் திரும்பினார்கள். ஒட்டநத்தத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் சிலசிலருக்கு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவரவர்கள் அந்தந்த வீடுகளுக்குச் சென்றார்கள். சில இளைஞர்கள் குளத்தூராரையும், காடல்குடியாரையும் சூழ்ந்துகொண்டு தங்கள் ஆவேச உணர்ச்சிகளை அள்ளித்தெளித்தனர். எழுபது வயதை எட்டிப்பிடித்த குளத்தூராரும் ஒரு இளைஞராகவே அப்பொழுது காணப்பட்டார். குளத்தூராருக்கும் காடல்குடியாருக்கும் சுப்பா நாயக்கர் வீட்டில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சில இளைஞர்களுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அகழிக்கரை ஓரமாகப் போய் உட்கார்ந்து, பாளையங்கோட்டையில் செய்யப் போகின்ற செயல்கள்பற்றிப்பேச ஆரம்பித்தனர். அதில் **பொம்மையா** என்றொரு இளைஞன்-அவனுக்கு அப்போதுதான் கல்யாணம் பேசி முடிக்கப்பட்டிருந்தது. எந்தத் தேதியில் பாளையங்கோட்டைச் சிறையை உடைக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்களோ, அதே தேதியில்தான் அவனுக்குக் கல்யாணம். கல்யாணத்தை நிறுத்திவிடப் போகின்றேன் என்றான் அவன். மற்றவர்கள் அதை மறுத்து, கல்யாணத்தைப் பாளையங்கோட்டையிலேயே நடத்தும்படியும், சிலர் அதற்கு வரும் விருந்தாளிகளைப் போல் வருவதாகவும் கூறினர். அதன்படி பொம்மையாவின் திருமண ஊர்வலம் சிறைச்சாலை வழியே செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வீரத்தேவன் கடற்கரை நாயக்கரின் வீட்டில் விருந்துசாப்பிட்டுவிட்டு, தெரு விளக்கின் அருகில் வந்து உட்கார்ந்தான். வீரத்தேவனின் உயிர் நண்பன் கோபால் நாயக்கன் அவன் அருகில் வந்து உட்கார்ந்து, அவன் தனிமையைக் கலைத்தான். 'சிங்கத்தேவன் ஏன் வரவில்லை?' என்று கோபால் நாயக்கன் கேட்டான்.

'ஏனோ தெரியவில்லை. அவன் என்மேல் ஆத்திரமாகவே இருக்கிறான். அவனுக்கும் என் தந்தைக்கும் ஒருமுறை தகராறு வந்தது. அது நெடுநேரம்கூட நீடிக்கவில்லை...'

'என்ன தகராறு?' என்று கேட்டான் கோபால் நாயக்கன்.

'அதுவும் எனக்குச் சரியாகத் தெரியாது. ஆனால் அதிலிருந்தே சிங்கத்தேவன் என்மீது ஆத்திரமாயிருக்கிறான். இத்தனைக்கும் நமது கூட்டத்தில் ஆர்வமுள்ளவனாகவே காணப்படுகிறான். என்னைத்தான் பகைவனாகக் கருதுகிறான். என் தந்தை கொல்லப்பட்டதைப்பற்றி, இன்றுவரை அனுதாபத்திற்காக ஒரு வார்த்தைகூடக் கேட்டதில்லைஅவன்!' என்றான் வீரத்தேவன்.

'ஆமாம், உன் தங்கை **கண்ணாத்தாள்** காணாமல் போய் ஆறு மாதத்திற்குமேலாகிறதே; அவள் இருக்குமிடத்தைப்பற்றி ஏதாவது துப்புக் கிடைத்ததா?' என்று கேட்டான் கோபால் நாயக்கன்.

வீரத்தேவன் கண் கலங்கிற்று.

'இல்லை, அவள் இருக்குமிடம் தெரிந்தால், அவளைக் கவர்ந்து சென்ற கயவன் யார் என்று தெரிந்தால் அவனைக் கண்டதுண்டமாக்குவேன்; கருணை காட்டமாட்டேன்' என்றான் வீரத்தேவன்.

தொடரும்

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் ஆவலை நிறைவேற்ற வந்துவிட்டது!

கண்ணதாசன்

எழுதிய

"மனம்போல வாழ்வு"

விலை ரூ. 1-50. தபால் மூலம் 1-75.

முத்து புத்தக நிலையம்

மேலப்புலிவார்டு ரோடு, திருச்சி-2.

மா-சே-துங்கிற்குப் பிறகு?

கட்சி அரசியல் ஆதிக்கப்போட்டி காரணமாக நூற்றுக்கணக்கான அரசியல் தலைவர்களை பலிகொண்ட இடம் ரஷ்யா என்பதை யாரும் மறுக்கமுடியாது. ரஷ்யாவில் நடைபெற்ற எண்ணற்ற அரசியல் கொலைச் சம்பவங்களை, உலக மக்கள் தெரிந்துகொள்ள முடியாமல் ரஷ்ய இரும்புத்திரை மறைத்துவிட்டது என்றாலும், அத்தகைய கொடூர சம்பவங்களைப் பற்றிய உண்மைகளை ஸ்டாலின் மறைந்த பிறகே உலக மக்கள் தெரிந்துகொள்ள முடிந்தது.

ஸ்டாலினின் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் பேசமுடியாத ஊமைகளாக, ரஷ்ய அரசியல் வாதிகள் இருந்தார்கள். இன்று கொலுவீற்றிருக்கும் குருசேவ் உட்பட ஆட்டிவைக்கும் பொம்மைகளாக இருந்தார்கள். "ஒரு சமயம்வெளி நாட்டு தூதுவர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்தில் ஸ்டாலின் என்னை நடனம் ஆடச்சொன்னார். நடனம் ஆடுவதற்குரிய உடலமைப்பை பெற்றில்லாத நான், நடனம் ஆட முடியாது என்பதை அறிந்திருந்தும் என்னை நடனம் ஆடச்செய்து,நான் படும் அவமானத்தையும், துன்பத்தையும் ஸ்டாலின் கண்டு ரசித்தார். ஆனால் அன்று நான் நடனம் ஆடாமல் ஸ்டாலின் வார்த்தையை மீறியிருந்திருந்தால் அடுத்தநாளே என் உயிர் பிரிந்திருக்கும்." இத்தகைய மணிமொழி யார், வாயில் இருந்து உதிர்ந்தது என்பதை அறிய ஆவலாக இருக்கிறதல்லவா? வேறு யாரும் இல்லை! நம்ம குருசேவ் தான்! ஸ்டாலின் எத்தகைய பயங்கர மனிதனாக வாழ்ந்தார் என்பதற்கு மேலே சொன்ன சம்பவமே சான்றாகும்.

ஆனால் சர்வாதிகாரி ஸ்டாலினை எதிர்த்தால் உயிர் போய்விடும் என்பதை தெரிந்திருந்தும் ஸ்டாலினை எதிர்த்த எத்தனையோ அரசியல் விரர்கள் இருக்கத்தான் செய்தார்கள். அத்தகைய விரர்களை ஸ்டாலின் கொன்று குவித்தார். அத்தகைய வீரர்களின் மண்டை ஓடுகளை கற்களாக்கி இரத்தத்தை சாந்தாக்கி கட்டப்பட்டதுதான் கிரம்லின் கோட்டையாகும்.

ஸ்டாலினுக்குப் பிறகாவது அரசியல் கொலைச் சம்பவங்கள் ரஷ்யாவில்நிகழாதுஎன்ற நம்பிக்கை உலக மக்களிடையே ஏற்பட்டது. ரஷ்யாவில் அரசியல் கொலைகள் நிகழ்ந்ததற்கு காரணமாக இருந்த "ஸ்டாலினிசத்தை" ஒழித்துவிட்டதாக குருசேவ் கூறினார். ஆனால் ரஷ்யத் தலைவர்களின கட்சி அரசியல் ஆதிக்கப் போட்டி, இன்றளவும் ஒழிந்துவிட்டதா என்றால்-இல்லை. ஸ்டாலினிசத்தை ஒழித்துவிட்டதாக கூறியதெல்லாம் உலகை ஏமாற்றுவதற்குத்தான் என்பதை கடந்த சில சம்பவங்களில் இருந்து தெரிந்துகொள்ளலாம்.

ஸ்டாலின் மறைந்த பிறகு அவர் பதவியை வகிக்கக்கூடியவர்கள் என்று கருதப்பட்ட ஜார்ஜ் மாலன்கோவ், லவரண்டி பெரியா ஆகியவர்களில் பெரியாவையும் அவர் சகாக்கள் 8 பேரையும் சதிக்குற்றம் சுமத்தி நிற்கவைத்து சுட்டுக் கொன்றார்கள்.

அடுத்ததாக ரஷ்யாவின் பிரதமராக இருந்த ஜார்ஜ் மாலன்கோவையும், ரஷ்யாவின் முதிர்ந்த அரசியல்வாதியான மாலடோவையும் பதவியில் இருந்து விரட்டினார்கள். இன்று அவர்கள் உயிருடன் உலவுகிறார்களா? என்பதே சந்தேகமாக இருக்கும் அளவுக்கு அவர்கள் நிலைமை இருக்கிறது.

கம்யூனிசத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் நடைமுறைக்கும், கலாச்சாரம், பண்பு ஆகியவற்றிற்கும் ஒத்த முறையில் புதிய பாதையை வகுத்துக்காட்டியவர் யூகோஸ்லவேக்கிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவாகும்.

ரஷ்யாவின் கார்பன் காப்பியாக இருக்க ஆசைப்படும் இந்திய கம்யூனிஸ்ட்களைப்போல் மார்ஷல் டிட்டோ இருக்க விரும்பவில்லை. அதனால் ஸ்டாலினுக்கும், டிட்டோவுக்கும் விரோதம் ஏற்பட்டது. ரஷ்ய ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு கம்யூனிசத்தையே அடிப்படையாகக் கொண்டு யூகோஸ்லவேக்கியாவில் புதிய பாதையை அமைத்துக் காட்டினார்.

மார்ஷல் டிட்டோவின் அரசியல் செல்வாக்கு உயர்வதைக் கண்டு பொறுக்காத ரஷ்யத் தலைவர்கள் யூகோஸ்லவேக்கியாவை தன் வசப்படுத்தி வீழ்த்திவிடலாம் என்று கருதி குருசேவும், பிரதமர் புல்கானினும் யூகோஸ்லவேக்கிய தலைநகரான பெல்கிரேடில், டிட்டோவைச் சந்தித்து சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். "கடந்த காலத்தில் யூகோஸ்லவேக்கியாவுக்கும் ரஷ்யாவுக்கும் ஏற்பட்ட பிளவு ஸ்டாலினின் தவறால் உண்டாயிற்று ஆகவே இனியாவது நம் இரு நாடுகளும் நேசமுடன் வாழ்வோம்" என்று குருசேவ் கூறினார்.

ஆனால் மீண்டும் யூகோ - ரஷ்ய உறவு முறிந்திருப்பதிலிருந்து ரஷ்யாவின் பசப்பு வார்த்தைகளில் யூகோ மயங்கிவிடவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

மார்ஷல் டிட்டோ காட்டிய பாதையை தன் நாட்டிலும் காண ஆசைப்பட்ட தற்காக அங்கேரிய மக்கள் தலைவர்கள் இம்ரேநாகியும், ஜெனரல் மாலீட்டரும் மற்றும் இருவரும் கொல்லப்பட்ட சம்பவம் இன்னும் நம் நினைவைவிட்டு அகலவில்லை.

ரஷ்யாவில் அரசியல் தலைவராக இருப்பவர்கள் ஒவ்வொரு நாளும் சாவை எதிர்நோக்கியே வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேலே குறிப்பிட்ட சில சம்பவங்கள் ரஷ்ய அரசியல் ஆதிக்கப் போட்டிக்குச் சான்றாகும்.

ஆனால் ரஷ்ய கம்யூனிச ஆட்சி முறையை அப்படியே கடைபிடிக்கின்ற சீனாவின் நிலை என்ன? என்பதை உலகம் மிக உன்னிப்பாக கவனித்து வருகிறது.

சீனாவில் கம்யூனிச ஆட்சி ஏற்பட்டு சுமார் 13 ஆண்டுகள்தான் ஆகின்றன என்பதால் ரஷ்யாவில் நடைபெறும் கட்சி ஆதிக்கப் போட்டி அவ்வளவாக நடைபெறவில்லை. என்ற போதிலும் மாசேதுங்கிற்குப் பிறகு ரஷ்யாவைப் போல் சீனாவிலும் அரசியல் கொலைகள் தவிர்க்கமுடியாதது என்பதை வெண்டல்-மெரிக் போன்ற அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள். அவர்கள் கருத்துக்களுக்கு ஆதாரமாக இன்றைய சீன அரசியலில் சில நிலைமைகள் உருவாகி வருகின்றன.

தனக்குப் பிறகு தன் பதவிக்கு வாரிசு நியமிக்கும் வழக்கம் நமது நாட்டு மடாதிபதிகளிடம் இருப்பது போல், கம்யூனிஸ்ட் மடாதிபதிகளிடமும் அத்தகைய வழக்கம் இருந்துவருகிறது. ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்காரியதரிசியாக இருந்த ஸ்டாலின், தனக்குப் பிறகு தன் பதவிக்கு ஜார்ஜ் மாலன்கோவையும் அதற்கு அடுத்தபடியாக லவரண்டி பெரியாவையும் நியமித்திருந்தார். அதன்படியே ஸ்டாலினுக்குப் பிறகு ஜார்ஜ் மாலன்கோவ் ரஷ்யப் பிரதமராக வர முடிந்தது.

சீனாவின் நிலைமை என்ன? அதன் எதிர்காலம் எத்தகைய முறையில் இருக்கும் என்பதை ஆராய்வோம். செஞ்சீனாவின் மிக உயர்ந்த பதவியான ஜனாதிபதி பதவியை மாசேதுங் வகிக்கிறார். அதற்கு அடுத்தாற்போல் பிரதமர் பதவியை சூ-யென்லாய் வகிக்கிறார். மா-சேதுங்கிற்குப் பிறகு அவர் பதவியை வகிக்கக் கூடியவர் சூ-யென்லாய் என்றுதான் உலக மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் சீனாவில் உதயமாகியிருக்கும் ஒரு தலைவனால் மாசேதுங்கிற்குப் பிறகு சீனாவிலும் ரஷ்யாவில் நடைபெறும் அரசியல் கொலைகள் நடைபெறலாம் என்ற அச்சம் வளர்ந்து வருகிறது. செஞ்சீனாவில் ஏற்பட இருக்கும் சம்பவங்களுக்கு காரணமாக இருக்கப் போகும் தலைவன்-அவர்தான் **டெங்-ஆஸ்யோபெங்** என்பவராகும். இவரைத்தான் மாசேதுங் தன் வாரிசாக நியமித்திருக்கிறாராம். இதை உறுதிப்படுத்தும் வகையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் சில சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

சீனாவின் சூச்சுவான் மாகாணத்தில் பிறந்த டெங், கம்யூனிஸ்ட் கட்சியின் மிக முக்கியமான இரண்டு பதவிகளை வகிக்கிறார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொதுக் காரியதரிசியாகவும், பொலிட்பீரோவின் நிரந்தரக் கமிட்டி (இது சகல அதிகாரங்களையும் கொண்டது) காரியதரிசியாகவும் இருக்கிறார். அத்துடன் சீனாவின் உதவிப் பிரதமராகவும் இருக்கிறார். இப்பதவிகளினால் சீனாவின் அரயசியல் இயந்திரத்தை இயக்குகின்ற பொறுப்பு இவரிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

டெங் வகிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுக் காரியதரிசி பதவி சாதாரணமானதல்ல! ஸ்டாலின் வகித்த ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி பொதுக் காரியதரிசி பதவிக்கு தற்போது குருசேவ் வகிக்கும் பொதுக் காரியதரிசி பதவி ஆகியவற்றிற்குச் சமமாகும். ஆனால் இத்தகைய பெரும் பதவிகள் வகிக்கும் டெங் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல், தலைவர்கள் வரிசையில் 7-வது தலைவராகத்தான் இருக்கிறார். மாசேதுங்கிற்குப் பிறகு அவருடைய நாற்காலியில் அமரத்தக்கவர்கள் சூ-யென்-லாய் அல்லது லியூ-ஷியாச்சி ஆகிய இருவர்தான் என்பதை சீனாவில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்விரு தலைவர்களைக் காட்டிலும் டெங்மீதுதான் மாசேதுங் அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறாராம்.

டெங் பாரிசில் படித்துக்கொண்டிருந்தபோது கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். பாரிசில் இருந்து ஷாங்காய் திரும்பியவுடன் 1925ல்சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து பணியாற்றினார். பிறகு 1927ல் சீனாவின் 7-வது 8-வது ராணுவப் படையை உருவாக்கி அதன் தலைமைப் பொறுப்பையும் வகித்தார். கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டபோது சீனாவின் தென்மேற்குப் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பெரிய பதவிகளை வகித்தார். 1953ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்க அரசியல் சட்டத்தை உருவாக்கிய குழுவிலும் அங்கம் வகித்தார். 1955ல் செஞ்சீன மாகாணமொன்றில் ஆட்சி செய்து வந்த காவோ-காங் என்பவர் மீது சதிக் குற்றம் சாட்டி ஓர் அறிக்கைவெளியிட்டார். இவ்வறிக்கையினால் காவோவை ஆட்சியில் இருந்து விலக்கினார்கள். இதில் டெங் காட்டிய திறமைக்குப் பரிசாக முதன் முதலாக 1955 ஏப்ரலில் சீன கம்யூனிஸ்ட் பொலிட்பீரோவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டெங் வாதத் திறமையில் வல்லவர். அதே சமயம் தன் அரசியல் சகாக்களுக்கு பெரும் விரோதியாகவும் வளர்ந்து வருகிறார். இருந்த போதிலும் டெங் திறமை வாய்ந்த அரசியல் தலைவன் என்பதையாரும் மறக்கவில்லை.

டெங்கின் அரசியல் வளர்ச்சி சூயென்லாயின் அரசியல் எதிர்காலத்திற்கு பெரும் இடையூறாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. மாசேதுங்கிற்குப் பிறகு சீன அரசியல் தலைவர்களுக்குள் ஏற்பட இருக்கும் அரசியில் தலைமைப் பதவிப் போட்டியின் விளைவு ரஷ்யாவில் நடைபெறும் அரசியல் கொலைகளை சீனாவிலும் உருவாக்குமா? என்பதை காலம்தான் காட்ட வேண்டும்.

-நாகை. வில்சன்

மயிலாடும் பாறை

எஸ். எஸ். தென்னரசு

அந்தக் காட்சி ரஞ்சிதத்தின் இருதய ஓட்டத்தை இழுத்துப் பிடித்தது. கால்களை நடக்கவொட்டாமல் பின்னச் செய்தது. மாலை வெய்யிலைப் போன்ற அவளது மஞ்சல் நிறக் கன்னத்தில், துடைக்கத் துடைக்க, அறுந்த பவளச் சரத்தைப்போல் ரத்தம் சொட்டுச் சொட்டாக உருண்டு கொண்டு இறங்கியது. அவசரத்தில் அதை அவள் முகமெல்லாம்இழுக்கிக் கொண்டாள். குமரப்பரைத் தூக்கி வந்த போக்கு வண்டிக்காரர்கள் அவரை வீட்டுக்குள் தூக்கி வந்து கட்டிலில் போட்டுவிட்டு வெளியே வந்தார்கள். ரஞ்சிதம் அவர்களைப் பின்தொடர்ந்து முகப்புக்கு வந்தாள்.

''ஐயா, அவருக்கு என்ன நேர்ந்தது? எதிரிகள் யாரும் வழிமறித்து அடித்துவிட்டார்களா? சொல்லுங்களய்யா? ஒன்றும் சொல்லாமல் தூக்கி வந்து போட்டுவிட்டுப் போகிறீர்களே, அவருடைய குதிரை எங்கே?'' ரஞ்சிதம் வண்டிக்காரர்களைக் கெஞ்சிக் கேட்டாள்.

''பாவம், நாங்கள் இல்லாவிட்டால் உங்கள் வீட்டுக்காரரை நீங்கள் உயிரோடு பார்த்திருக்கமாட்டீர்கள். வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது மாதிரி அவருடைய குதிரையே அவரைத் தூக்கி எறிந்துவிட்டது. குதிரையா அது? காண்டா மிருகம்! ஒரே தூக்கா, அவரைத் தூக்கிப் புதருக்குள் தள்ளி விட்டது. உடம்பெல்லாம் முள்! இன்னும் ஏதாவது இருக்கும், போய்ப் பாருங்கள்!'' என்று வண்டிக்காரர்கள் சொன்னார்கள்.

''ஐயோ, அத்தான்'' என்றுகதறிக் கொண்டு ரஞ்சிதம் உள்ளே ஓடினாள்.

குமரப்பர் அங்கு வேதனை பொறுக்கமுடியாமல் புலம்பிக்கொண்டுகிடந்தார். ரஞ்சிதம் அவளருகில் அமர்ந்து தேம்பித் தேம்பி அழுதாள். பேசமுடியாத நிலையில், வேதனையையும் தாங்கிக்கொண்டு அவளது கண்ணீரைத் துடைத்தார் குமரப்பர். அப்போது கண்ணீர் கலந்த ரத்த ஒழுக்கை அவள் கன்னத்தில் கண்டார். துணுக்குற்றவராய், காயத்திற்கு காரணத்தை கை ஜாடையால் கேட்டார். அவள் பதில் பேசவில்லை. கண்ணீர் கொட்டக் கொட்ட குமரப்பரின் கரங்களை கண்ணில் ஒத்திக்கொண்டாள்.

குமரப்பர் மிகுந்த வேதனைக்கிடையே பேச முனைந்தார்.

''ரஞ்சிதம்!''

அவள் தேம்பினாள்.

''என்னால் உங்களுக்கு நஷ்டம் என்று நேற்றுத்தான் சொன்னாய். இப்போது என்னால் உனக்கு எவ்வளவு கஷ்டம். அன்னையின் பாசத்தையும், மனைவியின் பிரிவாற்றுமையையும் உன்னிடத்திலே காண்கிறேன் ரஞ்சிதம்.'' என்று கண்கலங்கச் சொன்னார் குமரப்பர்.

ரஞ்சிதம் வேதனைகளையெல்லாம் ஒரு நொடியில் மறந்துவிட்டாள். குமரப்பர் அவளை மனைவி என்று சொன்னதில் ரஞ்சிதம் அவ்வளவு இன்பத்தைக் கண்டாள். ஆடவர்களை மிரட்டி, அடக்கி, அடிமைப் படுத்தும் ஆரவல்லி-சூரவல்லியைப் போல் தர்பார் நடத்திவந்த தாசி குலத்தில் பிறந்த ரஞ்சிதம், ஒருவருக்கே சொந்தமான உண்டியில் பணமாக மாறவேண்டும் என்று கனவு கண்டுகொண்டிருந்த நாள் வந்துவிட்டதை எண்ணி புளகாங்கிதமடைந்தாள். இருதயத்திலே பாய்ந்த அந்தக் குளிர்ச்சி முகத்தில் படருமுன் - கண்களிலே பின்னிக்கிடந்த சோகத்தின் சாயல் மறையுமுன், அவளுடைய தேம்பலையும் ஒதுக்கிக் கொண்டு இதழவித்து முறுவல் பூத்தாள். இளம்வெயில் அடிக்கும் போது துளிர்மழை தூறுவதுபோல் சிரிப்பும் அழுகையும் அவள் முகத்தில் மாறி மாறி பாவனை காட்டின.

தாது உதிரும் மலரிதழ்கள் விரிவதுபோல் அவள் வாய் திறந்து பேசினாள். அவளது செந்தளிர் நிற அதரம், இளங்கிளைபோன்ற கரங்கள், அங்கமெல்லாம் பொங்கி நிற்கும் இளமை-அப்படியே குமரப்பரை உணர்விழக்கச் செய்துவிட்டன.

''இத்தனை துன்பங்களையும் மறந்து இன்று நான் பூரித்திருக்கிறேன் அத்தான். வாழ்க்கைவளம் இருந்தும், வயதின் பொலிவிருந்தும், எங்கே குலத்தொழிலுக்கு அடிமைப் பட்டுவிடப் போகிறேமோ என்று எண்ணிஎண்ணி நொந்தேன். உன்னையும் மீறி நீ எப்படி அடிமைப்படமுடியும் என்று கேட்பீர்கள். உண்மை தான். நான் தாசிமகள் என்று யாரும் மணம் புரிந்துகொள்ளத் துணியாவிட்டால், இவ்வளவு சொத்திருந்தும். சுகமிருந்தும் ஆஸ்ரம வாழ்க்கையைத் தானே நான் மேற்கொள்ள வேண்டும்! ஆடவர்கள் கெட்ட காரியங்களைச் செய்யத் துணியுமளவிற்கு, நல்ல காரியங்களைச் செய்யத் துணிவதில்லை. இந்தத் தெற்குச் சீமையில் பேரும் புகழும் பெற்ற ஒரு தாசியின் மகளை ஏற்றுக்கொள்ளத் துணிந்ததற்காக நான் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன். நான் கௌரவமாக வாழ வேண்டும் என்று துடிக்கிறேன். என்னைப்போன்ற பெண்களின் மத்தியில் எனக்கு சம அந்தஸ்து வேண்டுமென்று தவம் கிடக்கிறேன். கொடியவளாய், குடும்பங் கெடுப்பவளாய் மற்றவர்கள் என்னைக் கணக்கிடக் கூடாது என்பதே என்னுடைய சாகாத பேராசை! கைகொடுக்க வந்தீர்கள். தலைவணங்கி மெய்யுறவு பூணத்தயாராக இருக்கிறேன். நல்ல பெண்கள் ஆலமரத்து நிழல்போன்ற விரிந்த இதயம் படைத்தவர்கள். அவர்கள் கணவன்மார்களுக்குக் காலமெல்லாம் உழைக்கத் தயங்க மாட்டார்கள். அத்தான், என்னைப் பாருங்கள். என் முகத்தைப் பாருங்கள். களங்கம் சிறிதும் இல்லாதவள். பல பேரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் யாரிடமும் மனதை நழுவ விட்டதில்லை. பார்க்கப் பதினாயிரம் பொன் தருவதற்குக்கூட பிரபுக்கள் இருக்கிறார்கள். பொன்னை-பொருளை கண் கெட்ட பிறகுகூடத் தேடிக் கொள்ளமுடியும். வாழ்க்கை அப்படியல்ல என்பதை அறிந்துதான் யுவராணியைப்போல், பர்வதச் சுனையில் மிதக்கவிட்ட பொன் மீனைபபோல் ஆடவர் அண்டாமல் வாழ்கிறேன்.

பத்து வருஷ காலம் பயின்ற ஆட்டக் கலையை என்னுடைய வாழ்க்கையை விடப் பெரிதென நான் நினைக்கவில்லை. சிலபேர், கலைக்காக வாழ்க்கையையே பணயம் வைக்கிறார்கள். அவர்களை வையகம் வாழ்த்துகிறது. அதில் தவறில்லை. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் கலை, என் வாழ்வை மட்டுமல்ல, எனக்குப் பிறகு என்னுடைய குடும்பத்தில் உருவாக இருக்கும் புதிய சமுதாயத்தையே புதை குழிக்கு அனுப்பக் கூடியதாக இருக்கிறது. அத்தான், உங்கள் விருப்பத்தை நான் மீற மாட்டேன். ஆட்டக்கலை எனக்கு வேண்டாம்; குடும்பக்கலைதான் எனக்குத் தேவை!''

-காற்றில் கனி உதிர்வதுபோல் ரஞ்சிதம் வார்த்தைகளை மடமடவென்று கொட்டிக்கொண்டிருந்தாள்.

''ரஞ்சிதம்! ஆடுகிறவர்களையும், பாடுகிறவர்களையும் உலகம் புகழ்கிறது; ஆனால் அவர்கள் நல்லவர்கள் ஒழுக்கமானவர்கள் என்று கருதும் அளவிற்கு உலகம் இன்னும் பக்குவப் படவில்லை. அதனால்தான் நான் கங்கைமுத்துவிடம் அப்படிச் சொன்னேன். அதற்காக நீ ஒரு தத்துவப் போதனையே செய்துவிட்டாயே!'' என்று மெதுவாகச் சொல்லி அவள் கன்னத்தில் தட்டினார் குமரப்பர்.

ஆள் நடமாட்டமே இல்லாத பயங்கரமான தீவிலிருந்து தப்பித்து வந்து விட்டவளைப்போல் ரஞ்சிதம் பெருமூச்சுவிட்டாள்.

அது முதல் குமரப்பர், ரஞ்சிதத்தின் வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்தார். என்றாவது ஒரு நாளைக்கு ரஞ்சிதத்தின் விருந்தாளியாக இருக்காமல் விடப் போவதில்லை என்று எண்ணி இறுமாந்திருந்த செட்டிநாட்டு சிங்காரவாலிபர்களெல்லாம் நாடி தளர்ந்து போனார்கள். அவர்களுக்கு அவள்மேல் இருந்த பிரியம், பொறாமை வடிவெடுத்து குமரப்பர்மேல் பாயத் தொடங்கியது. பணத்தைக் கொட்டிக் கொடுத்து, ஒரு பரதநாட்டிய பேரொளியையே ஆடவிடாமல் அணைத்துவிட்டான் என்ற கெட்ட பெயர் குமரப்பருக்குக் கிடைத்தது.

இத்தனை இடையூறுகளுக்கிடையே குமரப்பரும் ரஞ்சிதமும் ஆறு மாத காலம் ஆடிப்பாடி, கூடிக்குலவி, சோலைக் கிளிகளைப்போல், செங்கரும்புத் தோட்டத்து மதயானைகளைப்போல், இன்புற்றிருந்தார்கள்.

திடீரென்று சுமத்ரா தீவிலிருந்து குமரப்பருக்கு ஓலை வந்தது. அவரது கணக்கப்பிள்ளை கூராண்டான் செட்டியார் எழுதிய ஓலை அது. சுமாத்ரா தீவில் யானைத் தந்தத்திற்கு நல்ல கிராக்கி இருப்பதாகவும்,அடுத்த கப்பலில் லட்ச ரூபாய் பெறுமானமுள்ள யானைத்தந்தம் கொண்டு வந்தால் ஐந்து லட்ச ரூபாய்க்கு விற்கலாம் என்றும் கூராண்டான் செட்டியார் எழுதியிருந்தார்.

ஓலை கிடைத்து இருபத்தைந்து நாட்களுக்குப் பிறகு குமரப்பர்சுமாத்ராவுக்குப் புறப்பட்டார். பத்து மாதங்களாகியும் அவர் தாய்நாடு திரும்பவில்லை. ரஞ்சிதம் உளம் வெதும்பி உருகினாள். அத்தானுக்கு அழைப்பு விடுத்தாள். அந்தக் கடிதம்தான் குமரப்பரைக் குழப்பி எடுத்துவேடிக்கைப் பார்த்தது. கடிதத்தைப்படித்து விட்டு அவளுடைய படத்திற்கு எதிரே உட்கார்ந்து கடந்த கால நிகழ்ச்சிகளை நினைத்து நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த குமரப்பர் சுய நினைவு பெற நெடுநேரம் பிடித்தது.

★

ரஞ்சிதம் ஒவ்வொரு நாளும் குமரப்பரிடமிருந்து ஓலையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். சமீப காலத்தில் சுமாத்ராவிலிருந்து தமிழகத்திற்குக் கப்பல் வர இருக்கிறதா என்று வெளிநாட்டுத் தொடர்பு கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் ஆள் அனுப்பிக் கேட்டபடி இருந்தாள். அவள், இதயம் எதிர்பார்க்கும் பதிலை எங்கிருந்தும் பெறவில்லை. அவளை வளர்த்து ஆளாக்கிய கங்கைமுத்து நட்டுவனார் அவளருகில் இல்லாதது அவளுக்குப் பெருங்குறையாகத்தான் இருந்தது. நிழலைப் போல் இருந்து, அவள் நினைக்கின்ற காரியங்களையெல்லாம் செய்து முடித்துத் தந்துகொண்டிருந்த கங்கைமுத்து ஒரு வருஷ காலமாக அந்த ஒருநாள் நிகழ்ச்சிக்குப் பிறகு அவளுடைய வீட்டுப்படியே ஏறவில்லை. ஆளனுப்பி அவரை அழைத்து வந்துவிட அவளுக்கு அளவுகடந்த விருப்பம். நன்றி கொன்றவள் என உலகம் நிந்திக்குமே என்று அவள் அஞ்சி அஞ்சி நெஞ்சுருகினாள்.

ஒருநாள்! அந்திமயங்கும் வேளை, நட்டுவனார் கங்கைமுத்து வழக்கமாகத் தடவிக்கொள்ளும் சந்தன அத்தர் மணத்தது.

(தொடரும்)

★

எங்கும் கிடைக்கும்.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

தான் பிரிகின்ருன். எனவே நால் வகை நிலத்துள்ள பலர்பால் இன்பம் பெறப் பிரியாத அளவில் பெரும் மதிப்புக்குரியவனுகி விடுகிருன் சிலம்புத் தலைவன். பரத்தையர் பிரிவு ஒப்புக்கொள்ளக் கூடியது என்ருல் கோவலன் தவறுடையவன் என்பது பொருந்துவதோ ?

மேலும் அவ்வாறு பரத்தையர் மாட்டுத் தலைவன் பிரிகின்றமையால் தலைவிக்குக் காம உணர்ச்சி மிக்குத் தோன்றும்; பின்னர் தலைவன் வரும்வேளை உடல் மிக்கிருந்து கூடல் இன்பம் அளவிலடங்காது என்று அறிகிருேம். தொல்காப்பியரே—

"களவுங் கற்பும் அலர்வரை
வின்றே''
-தொல்-பொருள்-160.

"அலரில் தோன்றுங் காமத்து
மிகுதி''
-"-161

"கிழவோன் விளையாட் டாங்கும்
அற்றே''
-"-162

என்ற மூன்று சூத்திரங்களில் தலைவன் பரத்தையர் மாட்டுப் பிரிகின்றமையால் தலைவிக்குக் காமம் மிகும் என்ற பொருளைப் பெறுகின்ருேம்.

எனவே கண்ணகிக்குக் காமம் மிக்கு வளரச் செய்யக் கோவலன் மாதவிபாற் பிரிந்தான் என்று கொண்டு பார்த்தால் இலக்கண அமைதியும் கிடைக்கிறது. கோவலன் மாதவி பொருட்டுக் கண்ணகிக்குக் கொடுமை தரவில்லை; பிரிவின் பின்னர் பேரின்பம் தருதற்கே பிரிந்தானே என்று கொலைக்களக் காதையின் தொடக்கம் கோடிட்டுக் காட்டுகிறது.

மாதவிபால் சென்றமையால் கோவலனின் பிரிவு கண்ணகி நல்லாளுக்கு நீங்கா இன்பத்தையே இழுத்துக் கொடுத்தது. இல்லையென்ருல் இதுவரையில் கற்புக்கரசியாம் கண்ணகி நல்லாள் சமைத்து உண விட்டதாக யாண்டும் இளங்கோ அடிகள் குறிக்காமல் பிரிந்து மீண்ட செம்மல் கோவலன்- கண்ணகி தொடர்பை விரிவாக இனிமையாக எடுத்துக் காட்டுகையில்—

"தாலப் புல்லின் வால்வெண்
தோட்டுக்
கைவன் மகடூஉக் கவின்பெறப்
புனைந்த
செய்வினைத் தவிசிற் செல்வன்
இருந்தபின்
கடிமல ரங்கையிற் காதல
னடிநீர்
சுடுமண் மண்டையில்
தொழூதனள் மாற்றி
தண்ணீர் தெளித்துத்
தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம்
விரித்திங்கு
அமுத முண்க அடிக வீங்கென''

என்று கண்ணகி செயல்களைக் குறிக்கிருர். இந்த இல்லறச் செயல்கள் மட்டுமல்ல; ஒரு சொல் பேசா உள்ளம் கொண்டவளாயிருந்த கண்ணகி பல நற் சொற்கள் நவிலும் நிலையையும் பிரிந்து மீண்ட பின்னரே காண முடிகிறது. எதிர்மொழி கூரு ஏந்திழை தன் கணவன் தவருன ஒழுக்கம் புரிந்தமை தகுதியன்று என்று கூறும்பகுதியும்பின்னர்தான் உண்டு. எனவே திருமணம் ஆனவுடன்பெற்று மகிழ்ந்த பேறு எல்லாவற்றையும் விட, மாதவி மாட்டுப் பிரிந்து சென்று மீண்ட பின்னபே கோவலனல் கண்ணகிக்கு இன்பம் அதிகம் இருந்தது என்பது புலனுகின்றது.

கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்தமைபற்றிய செய்திகளைப் பார்க்கலாம். கண்ணகியைவிட்டுச் சென்று கண்ணகியால் தரவியலாத பெரும் பேற்றினைப் பெற்றளித்த மாதவிபால் கோவலன் மகிழ்ந்த நாட்களும் விரைவில் கழிந்தன. மாதவியோ கோவலனல் கணிகையர் குலத்தவள், நாடகமாடும் வனிதை என்று பழித்துரைக்கப்படும் நிலையையும் காணுகின்ருேம். இங்குதான் கோவலன் எவரையும் சந்தேகக் கண்ணேடு சந்திக்கும் குணம் படைத்தவன் என்று எண்ண நேரிடுகின்றது. ஆனல் மாதவியை வெறுத்துஉரைக்கும் கோவலனே சிறிதுகாலத்திற்குப் பின் மதுரைக்கு வரும் வழியில் கோசிகமானி என்ற பார்ப்பனரிடம் "மாதவி தீதிலள்'' என்று முடிவாகக் கூறிவிடுகிருன். இதைப் பார்க்கும் பொழுது கோவலன் எதையும் ஆராயும் அளவுக்கு செல்லுவதில்லை என எண்ண நேரிடுகின்றது.

கோவலன் பண்பின் காவலன் என்பதை அவனது செயல்கள் பலவற்றின் மூலம் அறியக்கூடும். மணிமேகலை பிறந்த விழாவில் அவனுடைய அருளுள்ளம், உள்ள உரம், கொடைத் தன்மை முதலியவற்றை அறிய முடிகின்றது. இத்தகைய அருங் குணங்களுடைய சிலம்புத் தலைவன் அரசனின் விரைவான ஆய்வற்ற கூற்ருல் கொலைப்படுத்தப் பட்டமை கொடுமைதான்! அதைவிட அத்தகைய அருளுள்ளம் அவலத்தில் அழிந்தும்கூட, சில ஆய்வாளர்கள் கொடுமையானவன், குற்றமுடையவன், கண்ணகியின் இன்ப வாழ்வை அழித்தவன், கணிகையரை நாடும் காமுகன் என்று கடிந்துரைப்பது இலக்கியத் துறையுள் இன்னும் பயிற்சி தேவை என்பதையே காட்டுகிறது.

கி. பி. இரண்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த மறத் தமிழ் வணிகன் கோவலன் மாற்றுக் குறையாத மாணிக்கமே என்பதை அன்றையச் சூழலைக் கொண்டே இலக்கணத்துடன்-இலக்கியத்துடன் எளிதில் அறிய முடிகின்றதன்ருே!

—கதிரவன்,
பி. ஏ. (ஆனர்ஸ்.)

வெண்பாப் போட்டி

23. கண்டபயன் ஒன்றில்லை காண்.

நாடு பிரிந்தால்நாம் நல்வாழ்வு வாழ்ந்திடலாம்
பாடு குறையும் பலன்பெருகும்—மோடிசெயும்
தெண்ட வடவருடன் சேர்ந்துறைவ தாலிங்குக்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—சோம. கிருஷ்ணன், மதுரை.

❁

தாய்நாட்டை மீட்பதற்கு, தண்டமிழைக் காப்பதற்கு
சேயாக நானின்றேன் செந்தமிழா!—தாய்ப்பாலை
உண்டபயன் ஒன்றொழிய உன்னாலே நானின்று
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—கனக சுப்பிரமணியம், சென்னை-1.

❁

சந்திர மண்டலத்தைத் தாவிப் பிடித்திடவே
சுந்தரமாய் திட்டமிட்டே தந்திரிகள்—அந்தரத்தில்
சுண்டெலியும் குக்கலுமே சுற்றவிட்ட தல்லாமல்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—கோ. மாணிக்கம், சென்னை-23.

❁

நாட்டின் நிலையறியீர் நன்மைபல செய்தறிவை
ஊட்டும் கருத்துரையீர் உண்மையிலீர்—காட்சிதர
அண்டமெலாம் சுற்றி அலைந்தென்ன உம்வரவால்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

❁

பச்சைத் தமிழ்மகனார் பாராள வந்தபின்பு
பச்சைக் குருதியினைப் பாயவிட்டார்—இச்சகத்தில்
வண்டமிழர் சாய்ந்த வகையல்லால் அன்னவரால்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—சி. சிவராமலிங்கம், சென்னை.

❁

செந்தமிழர் ஈந்திட்ட தீர்வை தனைவாங்கி
ஐந்தாண்டுத் திட்டம் அமைத்திட்டார்—மந்திரிகள்
தின்றபயன் ஊருராய்ச் சென்றபயன் அல்லாமல்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—வள்ளி, நாமக்கல்.

❁

ஆண்டு பலவாக ஆள்வோர் வடநாட்டில்
வேண்டும் புதுமை விளைத்திட்டார்—ஈண்டுமக்கள்
உண்பதற்கு மின்றி உளம்நொந்து நிற்பதலால்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—கேசரிக்கண்ணன், கோவை.

❁

பஞ்சமும், பட்டினியும், பாட்டாளி யின்துயரும்,
அஞ்சிடச்செய் துப்பாக்கி ஆட்சியும்—நெஞ்சுருகுங்
கண்ணீர்ப் புகைகுண்டுங் காங்கிரசார் தந்ததன்றி
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—க. வி. வரதராசன், அயனாவரம் 23.

❁

பொன்விளையும் தென்னாட்டைப் பொல்லா வடவர்தாம்
சின்னபின்ன மாக்கவே பார்க்கின்றார்—தென்னாகேள்!
தண்டமிழைக் காக்கத் தலையா யிரங்கொடுத்தும்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—தமிழ்ச்செல்வன், சென்னை-7.

❁

வெல்லும் விழியழகே! வெண்ணிலவே! என்றென்னை
அள்ளி அணைத்தவரும் இன்றில்லை—உள்ளமதில்
கொண்ட நினைவலைகள் கோடி எழுந்தென்ன
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—உதயசூரியன், அழகாபுரம்.

❁

கட்டழகும் வெட்டழகும் கண்டு மனமயங்கித்
தொட்டு மனம்புரிந்தேன் தூமொழியை;—மட டின்றி
வண்டு விழியாள் வழங்கும் மகவன்றிக்
கண்டபயன் ஒன்றில்லை காண்!

—செந்தாமரை, ஆத்துப்பொள்ளாச்சி.

❁

ஏகஇந்தி யாபேசும் எத்தர்கள் "கண்டாரோ
போகமெலாம் கொண்டங்கு போயினதை—தோகையே
கண்மூடிக் கூட்டுறவால் கண்டுநிகர் நம்நாடு
கண்டபயன் ஒன்றில்லை காண்!

—மோ. இரா. வரதராசன், மோவூர்.

❁

பள்ளிப் பருவத்தில் பன்முறைநாள் தோல்விகண்டேன்;
மெள்ளமெள்ள கல்லூரி வந்தடைந்தேன்—உள்ளபடி
ஆண்டு தவறாமல் அப்படியே; என்செலவால்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—து. திருநாவுக்கரசு, விருத்தாசலம்.

❁

பாங்கான வாழ்வு பறந்தோடி வந்துவிடும்
ஏங்காதே என்றே இயம்பினதால்—காங்கிரசே
உன்வாக்கை நம்பியே ஓட்டுநான் போட்டதற்கு
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—வே. கா. நாதன், பட்டமங்கலம்.

❁

கடவுள் பெயராலே காணிக்கை வாங்கி
உடமை பறிப்பதனை ஓரீர்—மடமையிருள்
மண்டிடவே செய்வதல்லால் மக்கள் துயர்தீர்க்கக்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—வள்ளுவதாசன், திருமயம்.

❁

கட்டிக் கரும்பே!என் காதலியே! நானுந்தன்
கட்டி இதழ்சுவைக்கக் காத்திருந்தேன்—தொட்டணைக்க
வெண்ணிலவில் நீயின்றி வேல்விழியே! நான்தனியே
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—பா. மயில்சாமி, எழில்புரம்.

❁

புத்தமதம் ஏசுமதம் போற்றுமிசு லாமுமதம்
இத்தரையில் வாழுகிற இந்துமதம்—அத்தனையும்
மண்ணுலகில் ஒற்றுமையை மாய்த்துவிட்ட தல்லாமல்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—குகன்குருசாமி, கமுதி.

❁

கெண்டை விழியென்பீர் கிள்ளை மொழியென்பீர்
பண்டை வினைநற் பயனென்பீர்—மண்டுமெழில்
கொண்டவளே யென்பீ ரிதுதவிர நான்வாழ்விற்
கண்டபயன் ஒன்றில்லை காண்!

—ச. சவகர்லால், அழகப்பாபுரம்.

❁

காட்டைத் திருத்திக் கவின்இலங்கை நாடாக்கி
மேட்டைத் திருத்தி வயலாக்கி,—கூட்டாக
அண்டிவாழச் சொன்ன அருந்தமிழர் அந்நாட்டில்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—ந. அலி, துறையூர்.

எங்கும் விற்பனையாகிறது!
முல்லை
(ஆகஸ்ட் இதழ்)
விலை அணா எட்டு.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சாங்குபிள் கோ, 15, திண்டுக்கல் ரோடு, மதுரை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு